9. ஏழை எளிய மக்கள் வறுமைக் கோட்டினைக் கடப்பதற்கு நெடுங்காலம் காத்திருக்க இயலாது என்பதை நன்குணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, வறுமை ஒழிப்புத் திட்டங்களை மாநிலம் முழுவதும் முழு வேகத்துடன் செயல்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. சுய உதவிக் குழுக்களை அடிப்படையாகக் கொண்டு, 12,524 பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் 840 பொது வாழ்வாதாரக் குழுக்கள் அமைக்கப்பட்டு, கடந்த நான்காண்டுகளில் 6,356 கோடி ரூபாய் சேமிப்பு செய்துள்ளதுடன், 25,785 கோடி ரூபாய் கடன் தொகை பெற்றுள்ளது. 3,04,690 இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு 2,61,784 நபர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். இதுவரையில், 414 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 1,13,881 இளைஞர்கள் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழிவகை செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-20

10. மாவட்டத் தலைநகரமாக உள்ள அல்லது ஒரு இலட்சத்திற்கும் மேல் மக்கள்தொகை கொண்ட 40 நகர்ப்புற உள்ளாட்சிகளில் மட்டும், 'தேசிய நகர்ப்புற வாழ்வாதார



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இயக்கத்தை' மத்திய அரசு செயல்படுத்த அனுமதித்துள்ளது. 2014-2015 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுகளுக்கு, முறையே 85.86 கோடி ரூபாயும், 172.45 கோடி ரூபாயும் இத்திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்க 39,062 நடைபாதை வியாபாரிகள் கண்டறியப்பட்டுள்ளனர். மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புறப் பகுதிகளிலிருந்து வறுமையினை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்ற நோக்குடன், 'தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தினை' மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தை ஒருங்கிணைப்பு அமைப்பாகச் செயல்படும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்காக 250 கோடி ரூபாயும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்காக 100 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## திறன் மேம்பாடு

11. 2023 ஆம் ஆண்டுக்குள் இரண்டு கோடி இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்க வேண்டுமென தொலைநோக்குத் திட்டம் 2023-ல் வகுக்கப்பட்டுள்ள இலக்கை எட்டுவதற்காக, ஒரு பெரும் திறன் மேம்பாட்டுத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்தி வருகிறது. பல்வேறு திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து ஒரே அமைப்பின்கீழ் கொண்டு வருவதற்காக, 'மாநில திறன் மேம்பாட்டு இயக்கத்தை' அமைத்து, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. பயிற்சியளிக்கும் தகுதி வாய்ந்த நிறுவனங்களை அங்கீகரிக்கவும், பயிற்சித் திட்டத்தையும், உதவித் தொகையையும் முறைப்படுத்தவும் இந்நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிறுவனம் இதுவரை, 146.22 கோடி ரூபாய் செலவில் 2,89,721 நபர்களுக்கு திறன் பயிற்சி அளித்துள்ளது. இத்துடன், கடந்த ஐந்தாண்டுகளில், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு 142.40 கோடி ரூபாய் செலவில் 23 புதிய அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களை அமைத்துள்ளதோடு, 10.16 கோடி ரூபாய் செலவில் 47 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களில், மொழி மற்றும் மென்திறன்

வளர்க்கும் ஆய்வுக்கூடங்களையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடங்கியுள்ளது. திறன் மேம்பாட்டு இயக்கத்திற்காக இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்மொழி வளர்ச்சி**

*12. தமிழ்மொழி வளர்ச்சிக்கென ஒரு தனிப் பெரும் முக்கியத்துவத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எப்பொழுதும் அளித்துள்ளார்கள். கடந்த ஐந்தாண்டுகளில், இத்துறைக்காக 175 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்ததன்மூலம் இது தெளிவாகிறது. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் புதிய கட்டடங்கள் மற்றும் கல்விசார் திட்டங்கள், சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புதிய நிருவாகக் கட்டடம் மற்றும் பழந்தமிழர் வாழ்க்கை முறையினை எடுத்துக்காட்டும் கலைக்கூடம், மதுரையில் சங்ககாலக் கலைகளுக்கான அருங்காட்சியகம், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொல்காப்பியர் அமர்வு ஆகிய முயற்சிகளுக்கு, மொத்தம் 90.04 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஒதுக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பழந்தமிழரின் கட்டடக் கலையைப் பிரதிபலிக்கும் வகையில், 37.25 கோடி ரூபாய் செலவில் மதுரையிலுள்ள உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு மாபெரும் வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. உலக அளவில் இணையதளம் மூலமாக தகவல்களை தமிழ் இணையக் கல்விக் கழகம் அளித்து வருகிறது. தமிழ்மொழி வளர்ச்சிக்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 32.74 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

**மகாமகம் திருவிழா**

*13. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பகோணத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வரும் மகாமகத் திருவிழா, இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாளன்று தொடங்கி 22 ஆம் நாள் வரை நடைபெற்று வருகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல இலட்சக்கணக்கான பக்தர்கள் மகாமகக் குளத்தில் புனித நீராடி வருகின்றனர். இத்திருவிழா சிறப்பான முறையில் நடைபெற அனைத்து முன்னேற்பாடுகளையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்துள்ளதோடு, பல்வேறு அடிப்படை வசதிகளை மேம்படுத்த 135.38 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*





*முற்பகல் 11-25*

**இலங்கைத் தமிழர்**

*14. இலங்கைத் தமிழர்களுக்கான உரிய நீதி கிடைத்திட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் முன்னின்று போராடி வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களது தொடர் முயற்சிகளால்தான், இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்குடன், நடந்த போர்க் குற்றங்களை விசாரித்து நீதி வழங்க வழிசெய்வதுடன், பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களுக்கு நிலங்களைத் திரும்ப வழங்கவும் இலங்கை அரசை முன்வரச் செய்ய மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இலங்கைத் தமிழர்கள்மீது, இத்தகைய கடுங்குற்றங்களைப் புரிந்தவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்கப்படவும், நீதியை நிலைநாட்டவும், பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களை விரைவாக மறுகுடியமர்த்தவும் தேவையான நடவடிக்கைகளை (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு சர்வதேச அமைப்புகளின் உதவியோடு மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வலியுறுத்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

**சட்டம் ஒழுங்கு**

*15. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் உறுதியான தலைமையினால்தான் இந்த அரசு பொறுப்பேற்றது முதல், மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு நிலை சீராக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறையால் உறுதியுடன் எடுக்கப்பட்டுவரும் திறமையான நடவடிக்கைகளினால் சமூக விரோத, தீவிரவாத மற்றும் நில அபகரிப்பு சக்திகள் ஒடுக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, 39 சிறப்பு நில அபகரிப்புத் தடுப்புப் பிரிவுகளை அமைத்து, 3,642 கோடி ரூபாய் மதிப்பிலான நிலங்களை இதுவரை மீட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறைக்கு 12,093 கூடுதல் பணியிடங்களுக்கு ஒப்புதல் அளித்து காவலர்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளதோடு, நவீன தொழில்நுட்ப தளவாடங்கள், வாகனங்கள் மற்றும் காவல் துறை திறம்படப் பணியாற்றத் தேவையான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில் 32 புதிய காவல் நிலையங்கள், 47 புதிய*

போக்குவரத்துக் காவல் நிலையங்கள், நான்கு புதிய காவல் கோட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் உருவாக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இது தவிர, 11,496 காவலர் குடியிருப்புகள், 290 காவல் நிலையங்கள், 160 பிற காவல் துறை கட்டடங்கள் என கட்டமைப்பு வசதிகளை 1,205.62 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேம்படுத்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

16. நாட்டிலேயே முதன் முறையாக, 2013-2014 ஆம் ஆண்டில் 'தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை' அமைக்கப்பட்டது. இவர்களில் 8,500 நபர்கள் இரண்டாம் நிலைக் காவலர்களாகத் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டில், 1,078 உதவி ஆய்வாளர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, காவல் துறையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 2011 ஆம் ஆண்டு, மே திங்கள் முதல், 30 புதிய கடலோரக் காவல் நிலையங்களை அமைக்க அனுமதியளித்து, கடலோரக் காவல் படைக்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேலும் வலுசேர்த்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அதிரடிப் படை, மகளிர் அதிரடிப் படை மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை போன்ற சிறப்புப் படைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அமைத்துள்ளது. 2016-2017ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 6,099.88 கோடி ரூபாயை காவல் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

17. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை நவீனப்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. மீட்பு நடவடிக்கைகளை திறம்படக் கையாள்வதற்காக, வான் தூக்கிகள், புதிய நீர்தாங்கி வண்டிகள், நுரை தகர்வு ஊர்திகள், விரைவு ஊர்திகள் போன்றவற்றை வழங்கி, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் திறனை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேம்படுத்தியுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், திறமைமிக்க தீயணைப்புப் படை வீரர்கள், 60,204 உயிர்களை மீட்டு, 1,858.56 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சொத்துகளை அழிவிலிருந்து





காப்பாற்றியுள்ளனர். சமீபத்தில் கடும் பாதிப்பை ஏற்படுத்திச் சென்ற வெள்ளத்தின்போது, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் துரிதமான, சிறப்பான செயல்பாட்டுத் திறன், வெள்ளிடை மலையாக வெளிப்பட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்துறைக்கு 227 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11-30

## சிறைச்சாலைகள்

18. சிறைக் கைதிகளை சீர்திருத்தி, அவர்களின் பொருள் ஈட்டும் திறனை வளர்த்து, அவர்கள் விடுதலையான பின்னர் சமுதாயத்தோடு ஒருங்கிணைந்து இணக்கமுடன் வாழ சிறைச்சாலைகள் வழிவகுக்க வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கருதுகிறது. இதைக் கருத்தில் கொண்டு, பலன் அளிக்கக்கூடிய பொருளாதார நடவடிக்கைகளில் அவர்களது சக்திகளை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தும் வகையில், வேலைவாய்ப்புப் பெறுவதற்கான பயிற்சிகள் சிறைக் கைதிகளுக்கு அளிக்கப்படுகின்றன. இத்துடன் சிறைச்சாலைகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேம்படுத்தியுள்ளது. 2011-2012 ஆம் ஆண்டு முதல், சிறைச்சாலைகள் துறைக்கு மொத்தமாக 1,026.50 கோடி ரூபாயை ஒதுக்கியதுடன், இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் 281.28 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஒதுக்கியுள்ளது.

## நீதி நிருவாகம்

19. துரிதமாக வழக்குகளை முடித்து, நீதியை விரைந்து வழங்கும் பொருட்டு, நீதி நிருவாகத்தை மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. நிலுவையிலுள்ள வழக்குகளை கணிசமாகக் குறைக்க, 22 கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள், 18 குடும்ப நீதிமன்றங்கள் மற்றும் 11 விரைவு நீதிமன்றங்கள் (Fast Track Courts) உட்பட 216 புதிய நீதிமன்றங்களை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நிறுவியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தாண்டுகளில், 772 கோடி ரூபாய் செலவில் நீதிமன்றங்கள் மற்றும் குடியிருப்புகள்

கட்டுவதற்கும், கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கும், பிற கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நீதி நிருவாகத் துறைக்கு 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 985.51 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நிருவாக ஆளுமை

20. அரசு நிருவாகத்தில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கவும், மக்களின் குறைகளைக் கண்டறிந்து தீர்க்கவும், பல முன்னோடி முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்டுள்ளது. மாநிலத்தில் உள்ள அனைத்து நகர்ப்புற, கிராமப்புறப் பகுதிகளிலும், அரசின் சேவைகள் மக்களை எளிதில் சென்றடைய, 10,000-க்கும் மேலான இ-சேவை மையங்களை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஏற்படுத்தியுள்ளது பாராட்டத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இச்சேவை மையங்களின் மூலமாக 1.5 கோடிக்கும் மேலான மக்கள், அரசு சேவைகளைப் பெற்று பயனடைந்துள்ளனர். முடங்கிப் போயிருந்த 'தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு' (TACTV) மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் புத்துயிர் அளிக்கப்பட்டு, இந்நிறுவனம், வட்டாட்சியர் அலுவலக வளாகங்களில் 269 இ-சேவை மையங்களை அமைத்துள்ளது. குறைந்த கட்டணத்தில் அனைவரும் பயன்பெறக்கூடிய வகையில், கேபிள் டி.வி. சேவைகளையும் அளித்துவருகிறது. இந்நிறுவனம், பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட்ட நகர்ப்புறப் பகுதிகளில் மேலும் 400 இ-சேவை மையங்களை அமைத்துள்ளது. புதுமையான அம்மா திட்டத்தின் மூலமாக, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கடந்த மூன்றாண்டுகளில், 50.50 இலட்சம் கோரிக்கை மனுக்களின்மீது நடவடிக்கை எடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அரசு சேவைகளை மக்களின் இல்லங்களுக்கே சென்றடையச் செய்துள்ளது. மக்களின் குறைகளைத் தீர்க்கும் மேலும் ஒரு முயற்சியாக, "1100" என்ற இலவசத் தொலைபேசி எண்ணைக் கொண்டு, "24 மணி நேரமும் செயல்படும் அம்மா அழைப்பு மையம்" (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மக்களின் குறைகளைத் துரிதமாகக் களைவதில் ஒரு முன்னோடி முயற்சியாக அமையும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.





முற்பகல் 11-35

## வருவாய் நிருவாகம்

21. கடந்த ஐந்தாண்டுகளில் ஒன்பது புதிய வருவாய்க் கோட்டங்களையும், 65 புதிய வட்டங்களையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உருவாக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தஞ்சாவூர், கடலூர், திருப்பூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களையும், கோவை, நீலகிரி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடங்களையும், ஆறு கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களையும், 64 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களையும், 400 வருவாய்த் துறைக்கான இதர கட்டடங்களையும் 410.99 கோடி ரூபாய் செலவில் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 8,000 கிராம நிருவாக அலுவலகங்களையும் புதுப்பித்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், முதலமைச்சரின் 'உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்' மூலமாக, 3,032 கோடி ரூபாய் அளவில் 37.52 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக 205.99 கோடி ரூபாயும், வருவாய்த் துறைக்கு மொத்தமாக 5,974 கோடி ரூபாயும் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## பேரிடர் நிவாரணம்

22. கடந்த வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் பெய்த வரலாறு காணாத பெரும் மழை, உயிருக்கும், பொருளுக்கும் கடுமையான பாதிப்பையும் இழப்பையும் ஏற்படுத்திச் சென்றுள்ளது. ஆயினும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையின்கீழ் போர்க்கால அடிப்படையில், (மேசையைத் தட்டும் ஒலி) திறமையான, ஒருங்கிணைக்கப்பட்ட மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொண்டதன் விளைவாக, குறுகிய காலத்திலேயே இயல்பு நிலை திரும்பியது. இது மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் உறுதியான நிருவாகத் திறனுக்கு மேலும் ஒரு சான்றாகும். வெள்ளத்தால் வீடுகள் இழந்த மற்றும் வீடுகள் சேதமடைந்த 5,25,121 குடும்பங்களுக்கு 282.91

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

கோடி ரூபாயும், வீடுகளில் வெள்ளம் புகுந்து பாதிக்கப்பட்ட 25,52,572 குடும்பங்களுக்கு 1,276.28 கோடி ரூபாயும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 3.82 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிர்கள் பாதிக்கப்பட்ட 4,81,975 விவசாயிகளுக்கு 451.16 கோடி ரூபாய் பயிர் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்துடன், 595.82 கோடி ரூபாய் செலவில் பொதுக் கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை உடனடியாக சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக, 3,039.24 கோடி ரூபாய் வெள்ள நிவாரணத்திற்காகவும், மறுசீரமைப்புப் பணிகளுக்காகவும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கியுள்ளது. தேசிய பேரிடர் நிவாரண நிதியத்திலிருந்து 1,773.78 கோடி ரூபாயை மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கியுள்ளது. மாநில பேரிடர் நிவாரண நிதியத்திற்கு 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 713 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மை**

23. பன்முனை உத்திகளை உள்ளடக்கி, தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த உறுதியுடன் செயல்பட்டுவரும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், பயிர் பலவகையாக்கல் (Crop Diversification) மற்றும் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை (Post Harvest Management) போன்ற முயற்சிகள்மூலம் பயிர் உற்பத்தித் திறனையும், விவசாயிகளின் வருவாயையும் பெருக்கியுள்ளார்கள். இதன் பயனாக, உற்பத்தித் திறனில் மக்காச்சோளம், நிலக்கடலை, எண்ணெய்வித்துக்களில் நாட்டிலேயே முதன்மை இடத்தையும், கரும்பில் இரண்டாம் இடத்தையும், சூரியகாந்தி மற்றும் நெல் உற்பத்தித் திறனில் மூன்றாம் இடத்தையும் தமிழகம் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

- திருந்திய நெல் சாகுபடி, நீடித்த நவீன கரும்பு சாகுபடி, துல்லியப் பண்ணையம், துவரை சாகுபடி, பருத்தி சாகுபடித் திட்டம் போன்ற பயிருக்கு ஏற்ற உத்திகளை பண்ணை அளவில் கடைப்பிடிக்க ஊக்குவித்தல்



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

- மண் வளத்திற்கு ஏற்றாற்போல் உரமிடுதலை ஊக்குவிப்பதற்காக, விவசாயிகளுக்கு மண் வள அட்டைகள் வழங்குதல்
- குறித்த காலத்தில், தரம் வாய்ந்த விதைகள் விவசாயிகளைச் சென்றடைவதற்காக, 25 கோடி ரூபாய் தொடக்க நிதியுடன் அமைக்கப்பட்ட தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை
- 22 மாவட்டங்களில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலமாகவும், பிற மாவட்டங்களில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலமாகவும், நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பு அதிகரிப்பு

முற்பகல் 11-40

- விவசாயிகளும், நுகர்வோரும் பயன்பெறும் வகையில், 5 மாநகராட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் 51 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுவரும் ‘பெருநகர காய்கறித் தொகுப்பு வளர்ச்சித் திட்டம்’
- நுண்ணீர்ப் பாசனம் அனைத்துப் பண்ணைகளுக்கும் சென்றடைய, குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கி, கடந்த ஐந்தாண்டுகளில் 986.38 கோடி ரூபாய் செலவில் 1,76,390 ஹெக்டேரில் நுண்ணீர்ப் பாசனம் (மேசையைத் தட்டும் ஒலி)
- பண்ணை இயந்திரமயமாக்கலை பெரிய அளவில் ஊக்குவிக்க, கடந்த ஐந்தாண்டுகளில், 201.94 கோடி ரூபாய் செலவில் டிராக்டர்கள், உழவு மற்றும் பயிர் அறுவடை இயந்திரங்கள் உள்ளிட்ட 62,735 கருவிகள் வழங்கியது
- வட்டார அளவில், 150 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுவரும் 100 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் என பல்வேறு முக்கியத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*24. 2015-2016* ஆம் ஆண்டில் நெல் கொள்முதலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை, சன்ன இரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு *1,450* ரூபாய் எனவும், சாதாரண இரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு *1,410* ரூபாய் எனவும் மத்திய அரசு நிர்ணயித்துள்ளபோதிலும், இவற்றை, முறையே *1,520* ரூபாயாகவும், *1,460* ரூபாயாகவும் உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு வழங்கியுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இக்கூடுதல் செலவினை, உற்பத்திக்கான ஊக்கத்தொகையாக மாநில அரசு தனது நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளது. இதுபோன்றே, டன் ஒன்றிற்கு, *2,300* ரூபாய் என கரும்பிற்கான நியாயமான ஆதாய விலை மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளபோதிலும், போக்குவரத்துச் செலவு உள்ளிட்ட மாநில அரசின் பரிந்துரை விலையை, டன் ஒன்றிற்கு *2,850* ரூபாய் என உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு நிர்ணயம் செய்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*25.* வேளாண்மைத் துறைக்கு *2010-2011* ஆம் ஆண்டில் *2,072.43* கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீட்டை, *2015-2016* ஆம் ஆண்டில் *6,503.40* கோடி ரூபாயாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உயர்த்தியுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* தேசிய தோட்டக்கலை இயக்கத்திற்கு *123* கோடி ரூபாயும், பண்ணை இயந்திரமயமாக்கல் திட்டத்திற்கு *100* கோடி ரூபாயும் உட்பட, வேளாண் துறைக்கு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்தமாக *6,938.57* கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**கூட்டுறவு**

*26. 2011-2012* ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, *22,486* கோடி ரூபாயை குறுகிய கால பயிர்க் கடனாக விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிகள் வழங்கியுள்ளன. கடன்களை தவணை தவறாது திரும்பச் செலுத்துவதை ஊக்குவிக்க, வட்டியில்லாத பயிர்க் கடன் வழங்க வட்டி மானியமாக, *2011-2012* ஆம் ஆண்டிலிருந்து *755.23* கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கியுள்ளது. வேளாண் விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள், தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பெருமளவு மேம்படுத்தியுள்ளது. கிராமப்புறப் பகுதிகளில் கூட்டுறவுச்





சங்கங்களில் சேமிப்புக் கிடங்குகளின் கொள்திறன் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளதை நன்கு அறிவீர்கள். *2011-2012* ஆம் ஆண்டு முதல் இதுவரை, *5,10,600* மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட *3,879* சேமிப்புக் கிடங்குகளை *489.63* கோடி ரூபாய் செலவில் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* உற்பத்திப் பொருள்மீது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களின் கடன் வழங்கும் திறனை, இதுபோன்ற திட்டங்கள் மேம்படுத்தியுள்ளன. இத்தகைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் கணினிமயமாக்கப்பட்டதோடு, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் *23* மத்திய கூட்டுறவு வங்கிகளிலும், மைய வங்கியியல் தீர்வு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

**கால்நடை பராமரிப்பு**

*27.* வேளாண்மைக்கு நிகரான முக்கியத்துவத்தை, கால்நடை பராமரிப்புத் துறைக்கு வழங்க வேண்டிய அவசியத்தை நன்குணர்ந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, கால்நடைத் துறைக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியுள்ளார்கள். முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, இத்துறைக்கு ஒதுக்கீடுகளை அதிகரித்ததன் மூலமாக, விவசாயிகளின் வருவாயில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்களுக்கு ஒரு நிரந்தர வாழ்வாதாரத்தை மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு ஏற்படுத்தியுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* கடந்த ஐந்தாண்டுகளில், *25* மாவட்டங்களில் *97.35* கோடி ரூபாய் செலவில் *3,014* பிராய்லர் கோழிப் பண்ணைகளையும், *10,195* நாட்டுக் கோழிப் பண்ணைகளையும் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு உதவியுள்ளது. விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், *231.11* கோடி ரூபாய் செலவில் *60,000* பயனாளிகளுக்கு *60,000* விலையில்லா கறவைப் பசுக்களையும், *927.75* கோடி ரூபாய் செலவில் ஏழு இலட்சம் பெண்களுக்கு *28* இலட்சம் வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகளையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கியுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

இதன் பயனாக, 70,994 பசுங்கன்றுகளையும், 42.95 இலட்சம் ஆட்டுக் குட்டிகளையும் (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதல் சொத்தாக பயனாளிகள் பெற்றதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) நாளொன்றுக்கு 2.6 இலட்சம் லிட்டர் அளவிற்கு பால் உற்பத்தியையும் மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு பெருக்கி சாதனை படைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தாண்டுகளில், 593.65 கோடி ரூபாய் மொத்த முதலீட்டில் பால் வளத் துறையின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பெருமளவு மேம்படுத்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

28. கால்நடை மருத்துவத் துறைக்கான கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து 422.37 கோடி ரூபாய் செலவில் 200 புதிய துணை மையங்களையும், 20 புதிய கால்நடை மருந்தகங்களையும் அமைத்ததோடு, 810 துணை மையங்களை கால்நடை மருத்துவமனைகளாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தரம் உயர்த்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலியில் புதிதாக கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களையும், ஓசூரில் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியையும் மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு தொடங்கியுள்ளது. கால்நடைத் துறைக்கு, 2006-2007 முதல் 2010-2011 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், 1,437.25 கோடி ரூபாயாக இருந்த வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டினை, முன்பு எப்போதும் இல்லாத அளவாக, கடந்த ஐந்தாண்டுகளில், மூன்று மடங்கிற்கு மேல் உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) 4,826.67 கோடி ரூபாயாக மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு ஒதுக்கீடு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, கடந்த ஐந்தாண்டுகளில், பால் வளத் துறைக்கு 643.37 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கால்நடைப் பராமரிப்புத் துறைக்காக 1,188.88 கோடி ரூபாயும், பால் வளத் துறைக்காக 119.62 கோடி ரூபாயும் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீனளம்**

29. மீன் வளத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டினைப்பற்றி எடுத்துரைக்கும்முன், அண்மையில் சென்னையில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது 691 மீன்பிடிப் படகுகளுடன், 2,278 மீனவர்கள்



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

முனைப்புடன் மீட்பு நடவடிக்கைகளில் திறம்பட ஈடுபட்டு, அவர்கள் ஆற்றிய அரும் பணியை முதற்கண் மனதாரப் பாராட்ட நான் விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் உள்ள அனைத்து மீனவர்களின் நலனிலும், குறிப்பாக, பாக் நீரிணைப்பில் உள்ள பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன்பிடித்து வரும் மீனவர்களின் நலனிலும், அவர்களின் பாதுகாப்பிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெரும் கவனம் செலுத்தி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அயராத முயற்சிகளின் காரணமாக, இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 357 மீன்பிடிப் படகுகளுடன் 2,271 தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவை மீட்டு, மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுவதே, இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் உறுதியான நிலைப்பாட்டை மீண்டும் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

30. மீன்பிடித் துறைமுகங்கள், இறங்கு தளங்கள், பதப்படுத்தும் பூங்காக்கள், உள்நாட்டு உற்பத்தி வசதிகள் மற்றும் விற்பனை வசதிகள் போன்ற மீன் வளத் துறைக்கான அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இத்தகைய கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக, 2011 ஆம் ஆண்டு, மே மாதத்திலிருந்து இதுவரை, 1,100 கோடி ரூபாய்க்கும் மேலாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நிதியை வழங்கியுள்ளது. சூரை மீன்பிடித் தூண்டில் படகுகளைப் பயன்படுத்தி ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கும் வகையில், 51.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடங்கியுள்ள திட்டம், மீனவர்களுக்கு கணிசமான வருவாயினை ஈட்டுவதற்கும், மாநிலத்தின் ஆழ்கடல் மீன்பிடித் திறனை வளர்ப்பதற்கும் உதவும். மீன் வளத் துறைக்காக தனிப் பல்கலைக்கழகத்தை நிறுவியதோடு, நாகப்பட்டினத்தில் மீன் வளப் பொறியியல் கல்லூரியையும், பொன்னேரியில் மீன் வள ஆராய்ச்சி மையத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு புதிதாக அமைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

31. மீனவர் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கான உதவித் தொகையாக, மீன்பிடி தடைக் காலத்தில் 507.57 கோடி ரூபாயையும், மீன்பிடி குறைவாக உள்ள காலங்களில் 309.17 கோடி ரூபாயையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கடந்த ஐந்தாண்டுகளில் வழங்கியுள்ளது. இத்திட்டங்களுக்காக, இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 183 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2006-2011 ஆம் ஆண்டு காலத்தில், 538.60 கோடி ரூபாயாக இருந்த மீன் வளத் துறைக்கான ஒதுக்கீட்டினை, கடந்த ஐந்தாண்டுகளில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது நல்லரசு 2,335.20 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2010-2011 ஆம் ஆண்டில் 146.07 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீட்டினை, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உயர்த்தி, 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 742.99 கோடி ரூபாயாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

### சுற்றுச்சூழல் மற்றும் வனம்

32. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கென ஒரு முக்கிய இடத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எப்பொழுதும் வழங்கி வருகிறார்கள். இதனை நடைமுறையில் செயல்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பிறந்த நாளன்று ஒரு சிறப்புத் திட்டமாக, கடந்த நான்காண்டுகளில், 175.89 கோடி ரூபாய் செலவில் 2.62 கோடி மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 68-வது பிறந்த நன்னாளை முன்னிட்டு மேலும் 61.68 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில், 68 இலட்சம் மரக் கன்றுகள் நடும் பணி நடந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்துடன், சதுப்புநிலப் பகுதிகளின் சுற்றுச்சூழல் தன்மையை மீட்டெடுக்கும் பணிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்டுள்ளது. நகர்ப்புறங்களில் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்ட நீர்நிலைகளை மறுசீரமைக்கும் முயற்சியில், சேத்துப்பட்டில் உள்ள ஏரியைப் புனரமைத்தது மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கண்ட மாபெரும் வெற்றியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக்கரணை சதுப்பு நிலங்கள் மற்றும் மாதவரம், அம்பத்தூர், கொரட்டூர் ஏரிகளைச் சீரமைத்து, சதுப்புநில சுற்றுச்சூழல் மீட்டெடுப்புப் பணிகளை மாண்புமிகு



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அம்மா அவர்களது அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

33. வன விலங்குகளைப் பாதுகாப்பதிலும், வன ஆதாரங்களை மேம்படுத்துவதிலும், பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் மேலாண்மையிலும் தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் உதவியுடன் 686 கோடி ரூபாய் செலவில், 2011-2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ‘தமிழ்நாடு பல்லுயிரினப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டம்’ 2018-2019 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதுவரை, இத்திட்டத்திற்காக 286 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும், நபார்டு வங்கி நிதியுதவியுடன், 85,000 ஹெக்டேர் நிலப் பரப்பில் செயல்படுத்தப்பட்டு வரும் ‘நீர்ப் பாதுகாப்பு மற்றும் பசுமை மேம்பாட்டுத் திட்டத்திற்காக’ 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வன விலங்குகளால் மனிதர்களுக்கு ஏற்படும் ஆபத்தைத் தவிர்க்க தடுப்புகளை அமைத்தும், சிறப்புக் குழுக்களை உருவாக்கியும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு சிறப்பான முயற்சிகளை எடுத்துள்ளது. வன விலங்குகளால் பாதிக்கப்படுவோருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கணிசமாக உயர்த்தியுள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைக்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 677.93 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

முற்பகல் 11-55

### நீர்வள ஆதாரங்கள் மற்றும் பாசனம்

34. காவேரி நதிநீர்ப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை போன்ற மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பிரச்சினைகளில், தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாப்பதில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றுள்ள வெற்றிகள் சரித்திர சாதனைகளாக விளங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) உச்ச நீதிமன்றத்தில் வழக்கிடை மனுவினைத் தாக்கல் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மதிநுட்பம் வாய்ந்த நடவடிக்கையினால், காவேரி நதியின் குறுக்கே கர்நாடக அரசால் மேகதாதுவில் அணை கட்டும் முயற்சி தடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

மாநிலத்தின் நீர்ப் பற்றாக்குறையைப் போக்க, மாநிலங்களுக்கு இடையே பாயும் நதிகளை இணைப்பதற்கான திட்டங்களைச் செயல்படுத்துமாறு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அதேவேளையில், மாநிலத்திற்குள்ளே பாயும் நதிகளை இணைப்பதற்கான திட்டப் பணிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

35. உலக வங்கி உதவியோடு அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தை 745.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்காக 408 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காவேரி டெல்டா பகுதியில், பருவநிலை மாறுதல்களை எதிர்கொள்ளும் திட்டத்தை வடிவமைத்து, ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வெற்றிகரமாகப் பெற்றுள்ளது. பருவநிலை மாறுபாடுகளை எதிர்கொள்ள உதவுவதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு, மாநில அளவில் செயல்படுத்தப்படும் முதல் திட்டம் இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடாகிய 1,560 கோடி ரூபாயில், வெண்ணாறு உப வடிநிலப் பகுதியில் 960.66 கோடி ரூபாய் செலவில் இத்திட்டப் பணிகளை, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முதற்கட்டமாக மேற்கொண்டுள்ளது. இதற்காக, இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 398.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, 61 உப வடிநிலப் பகுதிகளில் 2,674.80 கோடி ரூபாய் செலவில், நீர்வள நிலவளத் திட்டத்தின் முதல் கட்டப் பணிகள், உலக வங்கி உதவியுடன் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு, 2015 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் நிறைவு செய்யப்பட்டன. இதைத் தொடர்ந்து, 2,950 கோடி ரூபாய் செலவில், முதல் கட்டத்தில் பணிகள் மேற்கொள்ளப்படாத உப வடிநிலப் பகுதிகளில், உலக வங்கி உதவியோடு இத்திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

36. அத்திக்கடவு-அவினாசி திட்டத்தை 1,862 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

2011 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. பில்லூர் அருகில் பவானி ஆற்றிலிருந்து 2,000 கன அடி வெள்ள உபரி நீரை எடுத்து, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள 31 பொதுப் பணித் துறை ஏரிகள், 40 ஊராட்சி ஒன்றியக் குளங்கள் மற்றும் ஏனைய 538 நீர்நிலைகளில் நிரப்புவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு இந்தத் திட்ட அறிக்கை அனுப்பப்பட்டது. ஆனால், அன்று ஆட்சியிலிருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. நீர்ப்பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டமாக, அத்திக்கடவு-அவினாசி திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி மத்திய அரசிற்கு திருத்திய கருத்துரு உடனடியாக அனுப்பப்படும். அதே சமயம், இத்திட்டத்திற்கான ஆரம்ப கட்டப் பணிகள் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

37. பாரம்பரிய நீர்நிலைகளை மறுசீரமைத்து, நீர்த் தேவைகளை நிறைவு செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெரும் முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் காண்டூர் கால்வாயைப் புனரமைப்பதற்கான பணிகளை 221.15 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முடித்துள்ளது. 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, ஏரிகள், அணைக்கட்டுகள், வாய்க்கால்கள், பாலங்கள் மற்றும் தடுப்பணைகளை அமைப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும், 1,532.87 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 206 திட்டங்களை நபார்டு வங்கியின் உதவியோடு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்டுள்ளது. இவற்றுள், 577.45 கோடி ரூபாய் மதிப்பிலான 91 திட்டங்கள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன. 2006-2011 ஆம் ஆண்டில், 7,113.11 கோடி ரூபாயாக இருந்த நீர்வள ஆதாரத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை, 2011-2016 ஆம் ஆண்டில் 14,408.80 கோடி ரூபாயாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 3,673.91 கோடி ரூபாய் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

நண்பகல் 12-00

## பொது விநியோகத் திட்டம்

38. 2011 ஆம் ஆண்டு, மே மாதம் பதவியேற்ற முதல் நாளன்றே, அனைத்து அரிசி அட்டைதாரர்களுக்கும் விலையில்லா அரிசி வழங்கிட ஆணையிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றினார்கள். அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய முன்னோடி பொது விநியோகத் திட்டத்தின்கீழ், 1.91 கோடி அரிசி அட்டைகள் உள்ளிட்ட 2.02 கோடி குடும்ப அட்டைகள் இன்றளவில் புழக்கத்தில் உள்ளன. மத்திய அரசு சர்க்கரை லெவியை நிறுத்தி அதன் மானியத்தைக் கட்டுப்படுத்தியுள்ளபோதிலும், கிலோ ஒன்றிற்கு 13.50 ரூபாய் என்ற மானிய விலையில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மாதந்தோறும் சுமார் 36,500 டன் சர்க்கரையைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சந்தை விலை அதிக அளவு உயர்ந்துள்ளபோதிலும், பருப்பு வகைகளை கிலோ ஒன்றிற்கு 30 ரூபாய் விலையிலும், சமையல் எண்ணெய் லிட்டர் ஒன்றிற்கு 25 ரூபாய் என்ற விலையிலும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தாண்டுகளில், உணவு மானியமாக 25,000 கோடி ரூபாயும், பொது விநியோகத் திட்ட கடைகளை நடத்துவதற்காக கூட்டுறவு அமைப்புகளுக்கு அளிக்கப்படும் நிருவாக மானியமாக 762.93 கோடி ரூபாயும் மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) உணவு மானியத்திற்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 5,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

39. ஏழை மற்றும் நடுத்தர வருவாய்க் குடும்பங்களை அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்விலிருந்து பாதுகாப்பதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல பாராட்டத்தக்க முயற்சிகளை எடுத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

- விவசாயிகளையும், நுகர்வோரையும் நேரடியாக இணைப்பதற்காக 71 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள்



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

- பொருட்களை வாங்கி அடக்க விலையில் விற்பதற்காக 100 கோடி ரூபாய் அளவிலான விலை கட்டுப்படுத்தும் நிதியம்
- மாநகரங்கள் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் 530 அம்மா உணவகங்கள் (மேசையைத் தட்டும் ஒலி)
- நியாயமான விலையில் மருந்துகளை விற்பதற்காக 106 அம்மா மருந்தகங்கள் (மேசையைத் தட்டும் ஒலி)
- அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா சிமெண்ட் போன்ற புதுமையான திட்டங்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

இத்தகைய நடவடிக்கைகளால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விலைவாசி உயர்வின் தாக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாப்பார் என்ற முழு நம்பிக்கை மக்களிடையே ஏற்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## நெடுஞ்சாலைத் துறை

40. 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல், சாலைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 14,841 கோடி ரூபாய் செலவில் பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 5,935 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலைகளும், 6,740 கிலோ மீட்டர் மாவட்ட முக்கியச் சாலைகளும், 11,879 கிலோ மீட்டர் இதர மாவட்டச் சாலைகளும் அகலப்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

41. மேலும், நபார்டு வங்கியின் உதவியோடு, 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து 1,184.84 கிலோ மீட்டர் சாலை மேம்பாட்டுப் பணிகளையும், 914 பாலப் பணிகளையும், 2,563.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு செயல்படுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) திருமங்கலம் மற்றும் மூலக்கடை சந்திப்பில் உள்ள பாலம், முடிச்சூர்-ஸ்ரீபெரும்புதூர் சாலையில் உள்ள பாலம் ஆகியன உள்ளிட்ட, பல பாலப் பணிகள் சென்னை பெருநகர்ப் பகுதியில் 1,195.35

கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், சாலை அகலப்படுத்துதல் மற்றும் நடைபாதைகள், வடிகால்கள் போன்றவற்றை அமைப்பதற்கான பணிகள் 400 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இரயில்வே பணிகள் திட்டத்தின்கீழ், 1,116.94 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 52 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாலப் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசால் முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகள் 5,171 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலக வங்கியின் உதவியோடு, திட்டமிடப்பட்டவாறு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில், 2,653 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 12 சாலைப் பணிகள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக, இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,220.28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-05

42. மதுரை மாநகரத்திற்கான நான்கு வழித்தட வெளிவட்டச் சாலையை, 213.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வடிவமைத்து, இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்படவுள்ளன. சென்னை வெளிவட்டச் சாலையின் முதற்கட்டப் பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வெற்றிகரமாக முடித்துள்ளதோடு, இச்சாலையின் இரண்டாவது கட்டப் பணிகளும் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒரகடம் தொழில் பகுதி வழித்தடத் திட்டம் 961.29 கோடி ரூபாய் செலவில் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிழக்குக் கடற்கரைச் சாலையை நான்கு வழித்தடச் சாலையாக்கும் பணிகள் 314.15 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. சென்னை சுற்று வட்டச் சாலைக்கான விரிவான திட்ட அறிக்கை முடிவு செய்யப்படும் நிலையில் உள்ளது. இதனைச் செயல்படுத்துவதற்காக பன்னாட்டு நிதி நிறுவனங்களிடம் நிதியுதவியைப் பெற மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நெடுஞ்சாலைத் துறைக்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 8,486.26 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)





**எரிசக்தி**

43. 2011 ஆம் ஆண்டு மே திங்களில், மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது நிலவி வந்த கடும் மின்வெட்டு, பொதுமக்களையும், தொழில் துறையையும் எண்ணிலடங்கா இன்னல்களுக்கு ஆளாக்கியது. இப்பிரச்சினையைத் தீர்த்து, தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓர் உன்னதமான இலக்கை நிர்ணயித்தார்கள். இந்த இலக்கு அடையப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இம்மாமன்றத்திற்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஐந்தாண்டுகளில் புதிய திட்டங்களைச் செயல்படுத்தியதன் மூலமாக 4,455.50 மெகா வாட் உற்பத்தித் திறனும், நடுத்தர கால மற்றும் நீண்ட கால மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் மூலமாக 3,030 மெகா வாட் உற்பத்தித் திறனும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டு, 31-12-2015 அன்றைய நிலவரப்படி, மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் 26,806.50 மெகா வாட் அளவை எட்டியது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 8-7-2015 அன்று, இதுவரை மிக உயர்ந்த மின்தேவை அளவான 303.04 மில்லியன் யூனிட்டுகள் தடையின்றி முழுமையாக விநியோகிக்கப்பட்டன. 2010-2011 ஆம் ஆண்டில் 1,040 யூனிட்டுகளாக இருந்த ஓராண்டிற்கான சராசரி தனிநபர் மின் நுகர்வு, 2014-2015 ஆம் ஆண்டில் 1,228 யூனிட்டுகளாக உயர்ந்துள்ளது என்பதையும் இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

44. தொலைநோக்குத் திட்டம் 2023-ல் திட்டமிடப்பட்டவாறு, 1X660 மெகா வாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்கப்பட்ட அனல் மின் உற்பத்தித் திட்டம், 2X660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல மின் உற்பத்தித் திட்டம், 1X800 மெகா வாட் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் உற்பத்தித் திட்டத்தின் மூன்றாவது நிலை ஆகியவற்றிற்கான கட்டமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் 2 X 800 மெகா வாட் திறன் கொண்ட உப்பூர் அனல் மின் உற்பத்தித் திட்டம் மற்றும் 5X800 மெகா வாட் திறன் கொண்ட கடலாடி அனல் மின் உற்பத்தித் திட்டம், தூத்துக்குடி மாவட்டத்தில் 2 X 660 மெகா வாட் திறன் கொண்ட உடன்குடி அனல் மின் உற்பத்தித் திட்டம், 1X660 மெகா வாட் திறன் கொண்ட எண்ணூர்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

மாற்று அனல் மின் உற்பத்தித் திட்டம், 4X125 மெகா வாட் திறன் கொண்ட குந்தா நீர் மின் உற்பத்தித் திட்டம் மற்றும் 4X500 மெகா வாட் திறன் கொண்ட சில்லஹல்லா நீர் மின் உற்பத்தி நிலையம் ஆகியவற்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அயராத முயற்சிகளும், அவரின் கடும் உழைப்பும், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்காலத்திலும் தமிழ்நாடு மின்மிகை மாநிலமாகத் தொடர்ந்து விளங்குவதை உறுதி செய்யும் என நான் முழுமையாக நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-10

45. மின்கடவுக் கட்டமைப்பிற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதால், 4,010 கோடி ரூபாய் செலவில் 7,452 சுற்று கிலோ மீட்டர் நீளமுள்ள உயர் மின்னழுத்த வழித்தடங்களோடுகூடிய 252 புதிய துணை மின் நிலையங்களை நிறுவியுள்ளது. ஜெர்மனி பன்னாட்டு நிறுவனத்தின் (KfW) நிதியுதவியோடும், மத்திய அரசின் 40 சதவீத மானியத்தோடும் 1,593 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பசுமை ஆற்றல் மின்தொடர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் உதவியுடன் 5,014 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் 'தமிழ்நாடு மின்தொடரமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான' பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில், மாநிலத்தின் மின்கடவுக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக மட்டும் 9,639.36 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

46. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனத்தின் நிதிநிலையை மேம்படுத்துவதற்காக, நிதி சீரமைப்புத் திட்டத்தில் 2012-2013 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் 6,353 கோடி ரூபாய் அளவிலான குறுகிய காலக் கடன்களுக்கு அரசே பொறுப்பேற்றுக் கொண்டது. இந்நிறுவனத்திற்கு வழங்கப்படும் மின் கட்டண மானியத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பெருமளவு உயர்த்தி வழங்கியுள்ளார்கள். 2010-2011 ஆம் ஆண்டில் 287.12 கோடி ரூபாயாக இருந்த விவசாயத்திற்கான இலவச மின்சார



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மானியம், 2015-2016 ஆம் ஆண்டில் 3,319.30 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2011 ஆம் ஆண்டு மே திங்கள் முதல், 15,111.74 கோடி ரூபாயை பங்கு மூலதன உதவியாகவும், 9,694.26 கோடி ரூபாயை கடனாகவும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கியுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மின்சார மானியமாக 7,370.33 கோடி ரூபாயும், பங்கு மூலதன உதவியாக 2,000 கோடி ரூபாயும், கடனுதவியாக 1,483 கோடி ரூபாயும் உட்பட ஆக மொத்தம் மின் துறைக்கு 13,819.03 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**போக்குவரத்து**

47. நியாயமான கட்டணத்தில் உரிய நேரத்தில் சென்று வரும் வகையில், சிறப்பான போக்குவரத்து இணைப்பு வசதிகள் மக்களுக்குக் கிடைக்கச் செய்ய, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அளித்து வரும் சிறப்புக் கவனத்தின் காரணமாக, மாநில அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் இயக்கும் சேவைத் தடங்களின் எண்ணிக்கை, 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி, 20,739 ஆக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், சராசரியாக நாளொன்றுக்கு 93.85 இலட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெரும் முயற்சியால், பொதுமக்கள் பேருந்துகளில் உரிய வசதியுடன் பயணம் செய்ய வேண்டும் என்பதற்காக, சென்னை மாநகரப் பகுதிகளில் இயக்கப்படும் சிறு பேருந்துகளை உள்ளிட்டு, கடந்த ஐந்தாண்டுகளில், 1,510 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

48. மானியங்கள், பங்கு மூலதன உதவி, கடன்கள் போன்ற பல்வேறு நிதியுதவிகளை மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. 2011 ஆம் ஆண்டு, மே மாதத்திலிருந்து இதுவரை, மாணவ மாணவியர் பயணக் கட்டண மானியமாக 2,276 கோடி ரூபாயும், டீசல் மானியமாக 1,800 கோடி ரூபாயும், பங்கு மூலதன உதவியாக 1,190 கோடி ரூபாயும், கடனுதவியாக 1,015 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 6,281 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) நிதியுதவியாக மாண்புமிகு அம்மா அவர்களது

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

நல்லரசு வழங்கியுள்ளது. இதுதவிர, மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக்கான வைப்பு நிதியத்திற்கு 110 கோடி ரூபாயும் வழங்கியுள்ளது. வரும் நிதியாண்டில் போக்குவரத்துத் துறைக்கு 1,590 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

**தகவல் தொழில்நுட்பவியல் துறை**

49. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலினால் 'தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்', இ-சேவை மையங்களை வெற்றிகரமாக அமைத்துள்ளதுடன், கடந்த மூன்று ஆண்டுகளாக இலாபம் ஈட்டும் நிறுவனமாகவும் மாறியுள்ளது. 2011-2012 ஆம் ஆண்டில் 4.94 இலட்சமாக இருந்த சந்தாதாரர் எண்ணிக்கை தற்போது 70.52 இலட்சமாக உயர்ந்துள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் துறையில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் முன்முயற்சிகள் தேசிய அளவில் பாராட்டப்பட்டு, கடந்த நான்காண்டுகளில், இருமுறை 'வெப் ரத்னா' விருதை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு பெற்றுள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் துறைக்காக 2016-2017 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 135.29 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**தொழில் வளர்ச்சி**

50. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையின்கீழ், 2015 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 9 மற்றும் 10 ஆம் நாட்களில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு வெற்றிகரமாக நடத்தியது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற்பூங்காக்கள், சாலைக் கட்டமைப்பு, மின் விநியோகம், தொழில் முதலீடுகளுக்கு உகந்த சூழல், திறன்மிக்க மனிதவள ஆதாரம், சிறந்த ஊக்கத்தொகை திட்டங்கள் உட்பட, நமது மாநிலத்தின் உலகத் தரத்திலான கட்டமைப்பு வசதிகளை பறைசாற்ற இந்த முதல் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு பெரிதும் உதவியுள்ளது. இந்த மாநாட்டின்மூலம் 4.70 இலட்சம்



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் 2.42 இலட்சம் கோடி ரூபாய் அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்க்க வழிவகை ஏற்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

51. கோயம்புத்தூரில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு உயிரி தொழில் பூங்கா-III (TICEL) அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் 700 கோடி ரூபாய் செலவில், கனரகத் தொழில் உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்வதற்கான உற்பத்தி மையத்தையும், பொன்னேரி வட்டத்தில் உள்ள வயலூரில் 264 கோடி ரூபாய் செலவில் பாலிமர் தொழிற்பூங்காவையும் அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்த அயராத முயற்சிகள் மூலமாக, சென்னை-பெங்களூரு தொழில் வழித்தடத்தின் ஒரு பகுதியாக பொன்னேரி தொழில் முனையம் அமைக்கவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய தொழில் முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம் ஒன்றினை அமைத்திடவும் கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை**

52. கடந்த அரசின் ஐந்தாண்டு கால ஆட்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு 15,906 கோடி ரூபாய். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது நல்லரசின் ஐந்தாண்டு காலத்தில் 91,210 கோடி ரூபாய் அளவிலான புதிய முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தாண்டுகளில், முதலீட்டு மானியம், மின் கட்டண மானியம் போன்ற பல்வேறு மானிய உதவிகளாக, 442.73 கோடி ரூபாயை 22,169 தொழில் அலகுகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கியுள்ளது. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது, இத்துறையில், 16,532.67 கோடி ரூபாய் அளவிற்கு 10,073 தொழில் முனைவோர், அடுத்த இரண்டு ஆண்டுகளில் முதலீடு செய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர். இதில், 1,529.88 கோடி ரூபாய் முதலீட்டில் 1,458 தொழில் முனைவோர்கள் இதுவரை உற்பத்தியைத் தொடங்கியுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

*53. 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெறும் கடன்களுக்கு மூன்று சதவீத வட்டி மானியத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கி வருகிறது. 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இதுவரை, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் 1,859 கோடி ரூபாய் அளவிலான கடன்கள் வழங்கப்பட்டுள்ளதன்மூலம், 4,237 தொழில் அலகுகள் இந்த வட்டி மானியத்தால் பயன்பெற்றுள்ளன. முதல் தலைமுறை தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக, 'புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டம்'* (NEEDS) *என்ற புதுமையான திட்டம் ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு தொடங்கியுள்ளது. இதுவரை, இத்திட்டத்தின்கீழ் 737.45 கோடி ரூபாய் முதலீட்டிலான 1,586 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 348.13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*பிற்பகல் 12-20*

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை**

*54. விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டம் மாநிலத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பினை அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 2016 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது 167.89 இலட்சம் சேலைகளும், 167.81 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக, 499.16 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒருங்கிணைந்த கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் விற்பனை ஊக்கத்தொகையான 85.39 கோடி ரூபாயை மத்திய அரசு இதுவரை விடுவிக்கவில்லை என்றாலும், கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அந்த நிதியுதவியை எதிர்நோக்கி, மாநில பங்குத் தொகை உள்ளிட்ட, 126.25 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு வழங்கியுள்ளது. மேலும், நெசவாளர்களுக்கென 10,000 பசுமை வீடுகள் கட்டுவதற்கான திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு அறிவித்து, 260 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 495.16 கோடி ரூபாய் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்காகவும், 78.46 கோடி ரூபாய் தள்ளுபடி மானியத் திட்டத்திற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*55. கூட்டுறவு நூற்பாலைகளை 147.21 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தவும், 28.02 கோடி ரூபாய் செலவில் இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் இயங்கச் செய்யவும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. திருப்பூரில் கழிவுநீர் வெளியேறா தொழில்நுட்பத்தைப்* (Zero Liquid Discharge) *பயன்படுத்தும் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை தொடர்ந்து இயங்கச் செய்வதற்காக, 203.29 கோடி ரூபாய் வட்டியில்லா கடன் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதுவரை, 112.18 கோடி ரூபாய் இதற்கென விடுவிக்கப்பட்டுள்ளது. நாமக்கல், ஈரோடு, சேலம் மற்றும் கரூர் மாவட்டங்களிலும் இத்தகைய கழிவுநீர் வெளியேறா தொழில்நுட்பத்துடன்கூடிய பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

**ஊரக வளர்ச்சி**

*56. தரமான கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான அடிப்படை அலகாக குடியிருப்புகளை வரையறுத்து, ஊரக வளர்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு புதிய அணுகுமுறையைக் கொண்டு வந்துள்ளார்கள். இதன்படி, தமிழ்நாடு கிராமப்புற குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்* (THAI) *வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தாண்டுகளில், 3,680 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில், குடிநீர், தெரு விளக்குகள், மயானப் பாதைகள், கிராமப்புறச் சாலைகள் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளுக்கான 2,31,874 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள், 12,524 கிராம ஊராட்சிகளில் உள்ள 79,394 குடியிருப்புகளிலும், அதாவது, தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமக் குடியிருப்புகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு நிறைவு பெறும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

57. நமது நாட்டிலேயே முதல்முறையாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியுடன் கூடிய கிராமப்புற வீட்டு வசதியை வழங்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ‘சூரியஒளி மின்வசதி கொண்ட பசுமை வீடுகள் திட்டம்’ வடிவமைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டுதோறும் 60,000 வீடுகள் வீதம், மொத்தம் மூன்று இலட்சம் வீடுகள் கட்டப்படும் என மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அறிவித்தது. இதைச் செயல்படுத்தும் வகையில், கடந்த ஐந்தாண்டுகளில், 5,940 கோடி ரூபாய் செலவில் மூன்று இலட்சம் பசுமை வீடுகள் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இது தவிர, 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 4,876 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,41,637 வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக, கான்கிரீட் கூரை அமைப்பதற்கான செலவு உள்ளிட்ட மாநில அரசின் பங்காக 3,010 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு வழங்கியுள்ளது.

58. ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் மற்றும் ஆரம்பப் பள்ளிகளில், புதிய கட்டடங்கள், சமையல் கூடங்கள், குடிநீர் வசதிகள், கழிவறைகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்காக, 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து, ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 497.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 48,020 பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கடந்த ஐந்தாண்டுகளில் 2,180 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 77,960 பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2016-2017 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்காக 470 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-25

59. பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு செயல்படுத்தி வரும் கிராம சுகாதார இயக்கம், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் போன்ற முயற்சிகள் தேசிய அளவில் பல பாராட்டுகளைப் பெற்றுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கழிவறைகள் அமைப்பதை ஊக்குவிக்கவும், அவை பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யவும், சுய உதவிக் குழுக்களை



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாண்புமிகு அம்மா அவர்களது அரசு சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளது. இதுவரை இருந்திராத உயர் அளவாக, 2015-2016 ஆம் ஆண்டில், 1,827 கோடி ரூபாய் செலவில், 15.23 இலட்சம் வீடுகளில் கழிப்பிடங்கள் அமைக்கும் பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்டுள்ளது. கிராமப் பகுதிகளைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திட வேண்டும் என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னதமான குறிக்கோளாகும். இதற்காக, 110 கோடி ரூபாய் செலவில் 2,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகள் முதற்கட்டமாக செயல்படுத்தப்பட்டன. இப்பணிகள் தற்போது மேலும் 7,000 கிராம ஊராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) வீடு வீடாகச் சென்று குப்பைகளைச் சேகரித்தல், அவற்றைத் தரம் பிரித்தல் மற்றும் தகுந்த முறையில் மறு சுழற்சி செய்தல் போன்ற பொறுப்புகள் தூய்மைக் காவலர்கள்வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், கிராமங்களை தூய்மையாகப் பராமரிக்க, 12,524 கிராம ஊராட்சிகளிலும், 44.10 கோடி ரூபாய் செலவில் 17,638 மூன்று சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

60. 2015-2016 ஆம் ஆண்டிலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தைச் செயல்படுத்துவதில், அதிக தனிநபர் வேலைவாய்ப்பு நாட்களை அளித்தல், பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்பு அளித்தல் போன்றவற்றில் தமிழ்நாடு தேசிய அளவில் தனது முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, 20,742 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது நமது நாட்டிலேயே அதிக அளவு என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். 2014-2015 ஆம் ஆண்டிலிருந்து ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பிற்கான பண்ணைக் குட்டைகள், கால்நடை மற்றும் கோழி வளர்ப்புக் கொட்டகைகள், மரம் நடுதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காகவும் இத்திட்ட நிதி ஒருங்கிணைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. இம்முயற்சிகளைப் பாராட்டி, மத்திய அரசு 2-2-2016 அன்று, ‘முயற்சிகளை ஒருங்கிணைத்து வாழ்வாதாரத்தை நிலைக்கச் செய்வதற்கான சிறப்பு விருதினையும்’ (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான 7,155 கோடி ரூபாய் ஒதுக்கீட்டையும் சேர்த்து, ஊரக வளர்ச்சித் துறைக்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 18,503.80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகராட்சி நிருவாகம்**

61. மாநிலத்தில் நகர்மயமாதலின் தாக்கத்தை உணர்ந்து நகர்ப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டிற்காக, விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகராட்சிக்கான 'சென்னைப் பெருநகர் வளர்ச்சி இயக்கம்' இதர மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கான 'ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்கம்' போன்ற முன்னோடித் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தியுள்ளார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில், 6,250 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர், கழிவுநீர் கால்வாய்கள், மழைநீர் வடிகால்கள், திடக்கழிவு மேலாண்மை போன்ற அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான 13,688 பணிகள் இத்திட்டங்களின்கீழ் செயல்படுத்தப்பட்டுள்ளன.

62. 'திறன்மிகு நகரங்கள்' திட்டத்தின்கீழ் 2015-2016 ஆம் ஆண்டிற்கு, சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளை மத்திய அரசு தேர்வு செய்துள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துடன், 'அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டத்தின்' (AMRUT) கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 3,316.22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. திறன்மிகு நகரங்கள் திட்டத்திற்காக 400 கோடி ரூபாயும், அம்ருத் திட்டத்திற்காக 500 கோடி ரூபாயும் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

63. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 3,831 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்' (TNSUDP) உலக வங்கியின் உதவியோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 2,212.89 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 13 திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அமைப்புகளிலும், படிப்படியாக பாதாளச் சாக்கடை திட்டப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற இலட்சிய முடிவை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்து, அதன்படி, 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து, மாநிலத்தில் உள்ள 52 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 3,500.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-30

64. அனைத்து நகர்ப்புறப் பகுதிகளிலும் சுத்தத்தையும், சுகாதாரத்தையும் பேணிக் காப்பதற்கு சிறப்புக் கவனம் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை நிதியத்திலிருந்து, ஐந்து மாநகராட்சிகள், 67 நகராட்சிகள் மற்றும் 291 பேரூராட்சிகளில் 319.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திறந்தவெளியில் மலம் கழிப்பதை தமிழ்நாட்டில் அறவே அகற்றும் நோக்குடன், பொதுக் கழிப்பறைகளை அமைப்பதற்கும், அவற்றைச் சீரமைப்பதற்கும் 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு 346.18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ் கிடைக்கப்பெற்ற 185.74 கோடி ரூபாய் நிதியும், மாநில அரசின் திட்டங்களோடு ஒன்றிணைக்கப்பட்டு நகர்ப்புறப் பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்காக 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 12,194.21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குடிநீர் வழங்கல்**

65. கிராமப்புறப் பகுதிகளிலும், நகர்ப்புறப் பகுதிகளிலும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது. 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து, சென்னை மாநகரத்தின் குடிநீர் வசதிகளை மேம்படுத்துவதற்காக 3,780.25 கோடி ரூபாயும், பிற நகர்ப்புறப் பகுதிகளுக்கு 3,102.60 கோடி ரூபாயும் மாண்புமிகு அம்மா

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

அவர்களுடைய அரசு செலவிட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திறன்மிகு வழிகாட்டுதலின்கீழ், வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் (JICA) நிதியுதவியோடு செயல்படுத்தப்படும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவை நிறைவு பெற்றுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல், 45 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் இதர குடிநீர்த் திட்டங்கள் 8,410.35 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 4,452.40 கோடி ரூபாய் மதிப்பிலான 60 திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

66. குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள 69 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 30 பேரூராட்சிகள் ஆகியவற்றில் எதிர்மறை சவ்வூடு பரவல் நிலையங்கள் அமைத்து, குடிநீர் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை நகரில் வசதி படைத்தோர் மினரல் வாட்டர் பயன்படுத்துவதைப் போல், சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை ஏழைகளும் பருகிப் பயனடைய 'அம்மா குடிநீர்த் திட்டம்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஒரு புதிய திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதன்படி, முதல் கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏழை மக்கள் அதிகம் வசிக்கும் 100 தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் எதிர்மறை சவ்வூடு பரவல் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நிலையங்கள் அமைக்கப்படும். இவை ஒவ்வொன்றும் மணிக்கு 2,000 லிட்டர் நீர் சுத்திகரிப்புத் திறன் கொண்டதாக இருக்கும். தேவைக்கேற்ப இதன் செயல்திறன் அதிகரிக்கப்படும். பொதுமக்களுக்கு விலையேதுமின்றி இந்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஒரு குடும்பத்திற்கு நாள் ஒன்றுக்கு 20 லிட்டர் என்ற அளவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதை, குடிநீர் சுத்திகரிப்பு தானியங்கி நிலையத்திலிருந்து ஸ்மார்ட் கார்டு மூலம் மக்கள் பெற வழிவகை செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

67. கடந்த ஐந்தாண்டுகளில், கிராமப்புறக் குடிநீர் வழங்கும் திட்டங்களின்கீழ், 5,911 கோடி ரூபாய் செலவில் 24,279 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி வழங்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில், 15,145 குடியிருப்புகளுக்கு குடிநீர்



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வழங்குவதற்கு 3,719 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து குறைந்தபட்சத் தேவைகள் திட்டத்தின்கீழ் 1,093 கோடி ரூபாயும், 1,960 கோடி ரூபாய் மாநில அரசின் பங்குடன் தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்தின்கீழ் 3,768 கோடி ரூபாயும், கிராமப்புறக் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக செலவிடப்பட்டுள்ளன. தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்திற்கு 2012-2013 ஆம் ஆண்டில் 536 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாட்டிற்கான ஒதுக்கீட்டை, 2015-2016 ஆம் ஆண்டில் 102.65 கோடி ரூபாயாக மத்திய அரசு குறைத்துவிட்டபோதிலும், தேவையான கூடுதல் நிதியை அளித்து பணிகள் தொடர்ந்து நடைபெறுவதை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதி செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், கிராமப்புறக் குடிநீர் வழங்கல் பணிகளுக்காக கடந்த ஐந்தாண்டுகளில் நபார்டு வங்கிக் கடன் மூலமாக 501.45 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,802 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-35

**உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு**

68. நான்காவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநிலத்தின் வரி வருவாயின் பங்காக கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பெருமளவு நிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது. கடந்த ஐந்து நிதியாண்டுகளில், கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முறையே, 20,537.51 கோடி ரூபாயும், 14,697.25 கோடி ரூபாயும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. மாநில அரசின் நிதிப் பகிர்விற்காக 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 9,467.21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, பதினான்காவது மத்திய நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி, நமது மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொதுவான அடிப்படை நிதியுதவியாக 2,406.14 கோடி ரூபாயும், பொதுவான செயல்பாட்டு நிதியுதவியாக 494.99 கோடி ரூபாயும், வரும் நிதியாண்டில் கிடைக்கும்.

**வீட்டு வசதி**

*69.* தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஆகியவற்றின் மூலமாக, நகர்ப்புற ஏழை மக்களின் வீட்டு வசதித் தேவையை நிறைவு செய்வதற்காக, பெரும் முயற்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகிறார்கள். கடந்த நான்கு ஆண்டுகளில், 2,707.87 கோடி ரூபாய் செலவில், 18,978 குடியிருப்புகளைக் கட்டுவதற்கான பணிகளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டு வருகிறது. மேலும், நடப்பு ஆண்டில், 1,993.61 கோடி ரூபாய் செலவில் 18,553 குறைந்த விலையிலான குடியிருப்புகளைக் கட்டுவதற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, மாநில அரசு மற்றும் மத்திய அரசுத் திட்டங்களின்கீழ், 3,702.26 கோடி ரூபாய் செலவில், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான 62,609 குடியிருப்புகளை அமைக்க தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. ‘அனைவருக்கும் வீட்டு வசதி’ திட்டத்தின்கீழ், தனி வீடுகள் மற்றும் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் உட்பட 34,013 குடியிருப்புகளை 1,411.58 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் கட்டுவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்பணிகளுக்கென, மத்திய அரசு 510.20 கோடி ரூபாயும், மாநில அரசு 685.86 கோடி ரூபாயும் வழங்கிட உள்ளன. ‘அனைவருக்கும் வீட்டு வசதி’ திட்டத்திற்காக 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 689 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம்**

*70.* மாநில அரசு உரிய காலத்தில் நிதியுதவி வழங்கி வருவதால், சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதுவரை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு மாநில அரசு 3,907.82 கோடி ரூபாயும், மத்திய அரசு 2,307.75 கோடி ரூபாயும் தங்களது பங்களிப்பாக வழங்கியுள்ளன. இத்துடன், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையும் (JICA) 7,008.41 கோடி ரூபாய் கடனுதவி அளித்துள்ளது. இரயில், பேருந்து, மெட்ரோ இரயில் போன்ற பல்வேறு போக்குவரத்து வசதிகளும் ஒருங்கிணைக்கப்படும் பன்முகப் போக்குவரத்து முனையமாக சென்னை மத்திய இரயில் நிலையத்தை உருவாக்க, 389.42 கோடி ரூபாய் நிதியுதவியை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. மெட்ரோ இரயில் திட்டத்திற்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,032.55 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**மக்கள் நல்வாழ்வு**

*71.* சிறந்த மருத்துவக் கட்டமைப்பு வசதிகளை அளித்தும், மனிதவள ஆற்றலின் தரத்தை உயர்த்தியும், புதுமையான திட்டங்களைச் செயல்படுத்தியும், மக்களின் நல வாழ்வைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள். 2011 ஆம் ஆண்டு, மே மாதம் முதல், 6,090 மருத்துவர்கள் உட்பட 14,707 பணியாளர்கள் மருத்துவத் துறையில் புதியதாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) 2010-2011 ஆம் ஆண்டில் 4,663.64 கோடி ரூபாயாக இருந்த மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை, 2015-2016 ஆம் ஆண்டில் 8,823.17 கோடி ரூபாயாக மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு கணிசமாக உயர்த்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தாண்டுகளில் இத்துறைக்கு 34,042.90 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இது, கடந்தகால அரசின் ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 14,980.74 கோடி ரூபாயைவிட 127 சதவீதம் அதிகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நல்வாழ்வுத் துறைக்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 9,350.66 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-40

*72.* மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் ‘மாண்புமிகு முதலமைச்சரின் விரிவுபடுத்தப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்’ கீழ், இதுவரை, 2,852 கோடி ரூபாய் செலவில் 13.74 இலட்சம் நோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தில், அரசு மருத்துவமனைகளின் மிகச் சிறந்த செயல்பாட்டின் காரணமாக, 1,032 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டு, இந்த நிதி மூலம் இம்மருத்துவமனைகளின் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 2016-2017 ஆம்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 928 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ், 32.29 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் 3,016 கோடி ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்காக 2016-2017 ஆம் ஆண்டிற்கு 668 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2015-2016 ஆம் ஆண்டு முதல், இப்பயனாளிகளுக்கு அம்மா குழந்தைகள் நலப் பரிசுப் பெட்டகங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலத்தில் சிசு இறப்பு விகிதம் மற்றும் மகப்பேறு இறப்பு விகிதம் ஆகியவற்றைக் குறைப்பதற்கு இத்திட்டம் பேருதவி புரிந்துள்ளது.

73. நமது மாநிலத்தில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல சேவைகளை மேலும் வலுப்படுத்துவதற்காக தேசிய சுகாதார இயக்கத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இந்த இயக்கத்திற்காக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,368 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் முடிவுற்றுள்ளபோதிலும், இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்ட தொற்று நோய் அல்லாத நோய்கள் தடுப்பு நடவடிக்கைகள், மருத்துவ மேலாண்மை தகவல் அமைப்பு போன்ற முன்னோடி முயற்சிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன. நகர்ப்புற மருத்துவக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவதற்காக, 1,634 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு நகர்ப்புற மருத்துவக் கட்டமைப்புத் திட்டத்திற்கான ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவி விரைவில் பெறப்பட்டு, 2016-2017 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

74. மருத்துவக் கல்வியில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் ஆட்சிக் காலத்தில் நமது மாநிலம் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது. சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டம் ஆகிய இடங்களில் மூன்று புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மற்றும் கரூரில் மேலும் இரண்டு புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொத்தமாக, 710 கூடுதல்



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மருத்துவப் படிப்பிற்கான இடங்களும், 64 கூடுதல் முதுகலை மருத்துவப் படிப்பிற்கான இடங்களும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய நடவடிக்கைகளால், இன்று நாட்டிலேயே அதிக அரசு மருத்துவக் கல்லூரிகளைக் கொண்ட மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

75. திருச்சியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு மருத்துவமனையில், 100 கோடி ரூபாய் செலவில் விபத்து சிகிச்சை மையத்தோடு கூடிய உயர் சிகிச்சை மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலியில் 59 கோடி ரூபாய் செலவில் நான்கு மண்டல புற்றுநோய் சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், சேலம், மதுரை, திருச்சி மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் புதுக்கோட்டையில் உள்ள அரசு ராணியார் மருத்துவமனையிலும் மகப்பேறு சிகிச்சை பிரிவுகள் 160 கோடி ரூபாய் செலவில் உயர்சிறப்பு மையங்களாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

**பள்ளிக் கல்வி**

76. கல்வியின் தரத்தை உயர்த்தியும், பள்ளிக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியும், உரிய காலத்தில் ஆசிரியர்களைப் பணியமர்த்தியும், பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பள்ளிக் கல்விக்கு உயர் முக்கியத்துவத்தை அளித்து வருகிறார்கள். கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு 86,193 கோடி ரூபாயை பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்துறைக்கென 24,820 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

77. கடந்த ஐந்தாண்டுகளில், 221 புதிய ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கியுள்ளதோடு, 112 ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்களது

அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால், குழந்தைகளுக்குத் தரமான கல்வி அளிக்க வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உயரிய கனவு நனவாகியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்ட விதிகளின்படி, பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த 2,31,404 குழந்தைகளுக்கு, தனியார் பள்ளிகளில் பயிலும் வாய்ப்பை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அளித்துள்ளது. இதற்கென, 2013-2014 மற்றும் 2014-2015 ஆம் ஆண்டுகளுக்கு தனியார் பள்ளிகளில் பயிலும் இக்குழந்தைகளுக்கான கல்விக் கட்டணத்தை திருப்பி அளிப்பதற்காக, 97.05 கோடி ரூபாய் நிதியை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கியுள்ளது. கற்றல்-கற்பித்தல் முறைகளை மேம்படுத்துவதற்காக, ஒலி ஒளிக் காட்சிகளின் மூலம் பயிற்றுவித்தல் போன்ற பல்வேறு தொழில்நுட்ப யுக்திகள் மாணவர்களுக்குப் பெரிதும் பயனளித்துள்ளன. இதனால், பத்தாவது மற்றும் பன்னிரெண்டாவது வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 2011 ஆம் ஆண்டில் 85.30 சதவீதம் மற்றும் 85.90 சதவீதமாக இருந்த நிலை மாறி, 2015 ஆம் ஆண்டில் முறையே, 92.90 சதவீதம் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் 90.60 சதவீதமாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-45*

78. பள்ளிகளில் தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர் வசதிகள், சுற்றுச் சுவர்கள், மாணவ மாணவியர்களுக்கு தனித்தனி கழிவறைகள் போன்ற கட்டமைப்பு வசதிகள் 4,165.95 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைத்துப் பள்ளிகளிலும் போதிய குடிநீர் மற்றும் கழிவறை வசதிகளை வழங்குவதற்காக, நபார்டு வங்கியின் நிதியுதவியோடு 650.68 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின்கீழ் 6,124 கோடி ரூபாயும், தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத்தின்கீழ் 2,069 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன. 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்காக 2,329.15 கோடி ரூபாயும், தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத்திற்காக 1,139.52 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.





79. இடைநிலைக் கல்வியில் இடைநிற்றலைக் குறைப்பதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பு ஊக்கத்தொகைத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளார்கள். 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, இத்திட்டத்தின்கீழ் 1,744.38 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, 2010-2011 ஆம் ஆண்டில் 86.26 சதவீதமாக இருந்த மேல்நிலைக் கல்வி நிறைவு செய்தவர் விகிதம், 2014-2015 ஆம் ஆண்டில் 94.57 சதவீதமாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தரமான கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், 2011 ஆம் ஆண்டு முதல், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மடிக் கணினிகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், நான்கு சீருடைத் தொகுப்புகள், காலணிகள், புத்தகப் பைகள், பேருந்து கட்டணச் சலுகைகள், மிதிவண்டிகள் போன்றவற்றை 12,475 கோடி ரூபாய் செலவில் மாணவ மாணவியருக்கு அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்துள்ள இத்தகைய முன்னோடி நடவடிக்கைகள் பள்ளிக் கல்வியில் நாட்டிலேயே மிகச் சிறந்த மாநிலமாக தமிழகத்தை விளங்கச் செய்யும் (மேசையைத் தட்டும் ஒலி) என நான் நம்புகிறேன்.

## உயர் கல்வி

80. உயர் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும், அனைவருக்கும் உயர் கல்வி கிடைக்கச் செய்யவும், 39 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், நான்கு அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் 11 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளை மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு தொடங்கி முனைப்போடு செயல்பட்டு வருகிறது. மேலும், மாநிலத்தில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 959 புதிய பாடப் பிரிவுகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடங்கியுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், 667.48 கோடி ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, கல்வியின் தரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தை திரும்ப வழங்கும் திட்டத்தின்கீழ், கடந்த ஐந்தாண்டுகளில் 2,84,609 மாணவர்களுக்கு 2,544 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, அவர்கள் நிதிச் சுமையின்றி

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

தொடர்ந்து உயர் கல்வி பயின்று வருகின்றனர். இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவதற்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 579 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

81. மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் உயர் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 2010-2011 ஆம் ஆண்டில் 2,044.74 கோடி ரூபாயாக இருந்த உயர் கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை 2015-2016 ஆம் ஆண்டில் 3,477.29 கோடி ரூபாயாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உயர்த்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் முயற்சிகளால் நமது மாநிலத்தின் உயர் கல்வி சேர்க்கை, குறிப்பாக, பெண்கள் மற்றும் ஆதி திராவிடர்களின் உயர் கல்வி சேர்க்கை குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் உயர் கல்விக்கென 3,821 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுலா**

82. 2014 ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் நமது நாட்டிலேயே முதல் மாநிலமாகத் தமிழகம் விளங்குவது பாராட்டத்தக்க சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) தரங்கம்பாடியில் சுற்றுலா வசதிகளை மிகச் சிறப்பாக மேம்படுத்தியதற்காக 2013-2014 ஆம் ஆண்டிற்கான தேசிய சுற்றுலாத் துறை விருதினை நமது மாநிலம் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் 18.32 கோடி ரூபாய் செலவில் முக்கொம்பு, பச்சமலை, முத்துப்பேட்டை, நன்மங்கலம் மற்றும் டாப் ஸ்டேஷன் போன்ற சுற்றுலாத் தலங்களை சுற்றுச்சூழல் சார்ந்த சுற்றுலாத் தலங்களாக மாற்றவும், வண்டலூர் உயிரியல் பூங்காவிலும், ஸ்ரீரங்கத்திலும் வண்ணத்துப் பூச்சி பூங்காக்கள் அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியோடு 135 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுலா கட்டமைப்பு மேம்பாட்டிற்கான முதலீட்டுத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சுற்றுலாத் துறைக்காக 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 84.66 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பிற்பகல் 12-50

**இந்து சமய அறநிலையத் துறை**

83. பதின்மூன்றாவது நிதிக் குழுவின் நிதியுதவியைப் பயன்படுத்தி, கடந்த ஐந்தாண்டுகளில், 250 பழமையான கோயில்களைச் சீரமைப்பதற்காக 90 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உன்னத திட்டமான அன்னதானத் திட்டத்தின்கீழ், தினந்தோறும் 10.89 இலட்சம் ரூபாய் செலவில் 724 திருக்கோயில்களில் பக்தர்கள் பயன்பெறும் வகையில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 15.91 கோடி ரூபாய் செலவில் 143 கோயில் தேர்களையும், 3.31 கோடி ரூபாய் செலவில் 611 கோயில் குளங்களையும் புதுப்பிப்பதற்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் நிதி ஆதாரம் இல்லாத 12,504 கோயில்களில், தலா ஒரு இலட்சம் ரூபாய் என்ற அடிப்படையில் 125.04 கோடி ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டு ஒருகால பூஜை நடப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தாண்டுகளில், இராமேஸ்வரத்தில் உள்ள அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கத்தில் உள்ள அருள்மிகு ரங்கநாத சுவாமி திருக்கோயில் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள அருள்மிகு நாச்சியார் திருக்கோயில் உட்பட, 8,620 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**விளையாட்டு மற்றும் இளைஞர் நலம்**

84. விளையாட்டையும், இளைஞர் நலனையும் ஊக்குவிப்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எப்பொழுதும் சிறப்பு முன்னுரிமை அளித்து வந்துள்ளார்கள். கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பல சாதனைகளைப் புரிவதற்காகவும் பல்வேறு முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு எடுத்து வருகிறது. இருபதாவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பதினேழாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், தமிழக விளையாட்டு வீரர்கள் பல தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளதே இதற்குச் சான்றாகும்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, விளையாட்டு மேம்பாட்டிற்காகவும், விளையாட்டு தொடர்பான நடவடிக்கைகளுக்காகவும் 743.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துறைக்காக, வரும் நிதியாண்டின் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 142.88 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலன்**

85. 2011 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை, பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின்கீழ் 14,28,027 தொழிலாளர்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதுவரை, 20,83,198 பயனாளிகளுக்கு 540.37 கோடி ரூபாய் நலத் திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின்கீழ், பிற மாநிலங்களைச் சேர்ந்த 15,653 தொழிலாளர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஒன்பது இடங்களில், 106 கோடி ரூபாய் செலவில் 7,000 தொழிலாளர்கள் தங்கக்கூடிய வகையில் தற்காலிக தங்குமிட வசதிக்கான உறைவிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில், தொழிலாளர் நலத் துறைக்காக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு 625.22 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இத்துறைக்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 152.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமூக நலன்**

86. பெண்கள், குழந்தைகள், திருநங்கைகள், முதியோர் மற்றும் ஆதரவற்றோர் போன்ற சமுதாயத்தில் எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பிரிவினரின் முன்னேற்றத்திற்காக, எண்ணற்ற பல நலத் திட்டங்களை, கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள் தொடர்ந்து உயர் கல்வி பயில்வதை ஊக்குவிக்கவும், இளம் வயதில் திருமணம் செய்வதைத் தடுக்கவும், பல்வேறு திருமண உதவித் திட்டங்களின்கீழ், அப்பெண்களின் உயர் கல்வித் தகுதியின் அடிப்படையில் அவர்களுக்கு நிதியுதவி உயர்த்தி வழங்கப்படுகின்றது. இத்திட்டங்களின்கீழ் இதுவரை, 2,537.74 கோடி ரூபாய் பண உதவி பெற்று 7,72,643 பெண்கள்



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பயனடைந்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தாண்டுகளில், திருமாங்கல்யத்திற்கென 786.64 கோடி ரூபாய் மதிப்பிலான தங்கம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக, இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 703 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

87. பெண் குழந்தைகளின் நலனைப் பேணுவதற்காக, தொட்டில் குழந்தைகள் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற பல்வேறு புதுமையான திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வடிவமைத்துள்ளார்கள். பச்சிளம் குழந்தைகள் மற்றும் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் ஊட்டச்சத்துத் தேவைகளை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டமும், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டமும் நிறைவு செய்து வருகின்றன. சத்துணவுத் திட்டத்திற்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,645 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-55

88. அங்கன்வாடி மையங்களில் புதிய கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், குழந்தைகளுக்கு உகந்த சூழலை ஏற்படுத்தவும், 601.91 கோடி ரூபாய் செலவில் 15,313 புதிய அங்கன்வாடி மையங்களைக் கட்டியும், 29.52 கோடி ரூபாய் செலவில் குழந்தைகள் பயன்படுத்துவதற்கு உகந்த 16,402 கழிவறைகளை அமைத்தும், 12.34 கோடி ரூபாய் செலவில் 20,558 மையங்களுக்கு மின் இணைப்பு வழங்கியும், 123.93 கோடி ரூபாய் செலவில் 15,399 மையங்களைப் பழுதுபார்த்தும், இம்மையங்களின் தரத்தை மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு உயர்த்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சிறப்பு முயற்சியாக 27.35 கோடி ரூபாய் செலவில் 45,211 அங்கன்வாடி மையங்களுக்கும் சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டதன் மூலம் அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் இந்த வசதி உறுதி செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,696 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

*89.* முதியோருக்கும், சமூகத்தில் பிற நலிவடைந்த பிரிவினருக்கும் வழங்கப்படும் மாதாந்திர சமூகப் பாதுகாப்பு உதவித்தொகையை *1,000* ரூபாயாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உயர்த்தியதன் மூலம், அவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், சமூகப் பாதுகாப்பு உதவித்தொகைகளுக்காக *19,204* கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் *3,820* கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை**

*90.* எதிர்காலத்தில் திறன்மிக்க மனிதவள ஆற்றலின் தேவையைக் கருத்தில் கொண்டும், 'கணினிமய தமிழ்நாடு' என்ற கனவை நனவாக்கும் வகையிலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில், *12* ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக் கணினி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஒரு புதுமையான திட்டத்தின் மூலமாக, மாணவர்களுக்கு தற்கால தேவைக்கேற்ப உயர் தொழில்நுட்பத் திறன்களை அளித்து, அதே சமயம் கணினி அறிவில் இடைவெளியைக் குறைத்து இரு முக்கிய குறிக்கோள்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எட்டியுள்ளார்கள். இதுவரை, *31.78* இலட்சம் மடிக் கணினிகள் வழங்கப்பட்டு தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) *2014-2015* ஆம் ஆண்டு வரை, இதற்கென *3,231.74* கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. *2015-2016* ஆம் ஆண்டிற்கு *1,100* கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*91.* பெண்களின் வீட்டுப் பணிச்சுமையைக் குறைக்கவும், அவர்களைப் பொருளாதார நடவடிக்கைகளில் முழுமையாகப் பங்கேற்க வழிவகை செய்யவும், விலையில்லா மின்விசிறிகள் அல்லது மின் அடுப்புகள், மிக்சிகள் மற்றும் கிரைண்டர்களைத் தகுதியுள்ள பெண்களுக்கு வழங்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்தி வருகின்றது. *2016* ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள் *7,755.73* கோடி ரூபாய் செலவில்



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*1.76* கோடி எண்ணிக்கையிலான இத்தொகுப்புகளை வழங்குவதன் மூலமாக மேலும் ஒரு தேர்தல் வாக்குறுதியை மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு நிறைவேற்றியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்**

*92.* ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு சிறப்புக் கவனம் செலுத்தி, கடந்த ஐந்தாண்டுகளில், ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்களுக்கு (TSP) விகிதாச்சார அடிப்படையில் தகுந்த ஒதுக்கீடுகளை உறுதி செய்துள்ளது. தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கும் உயர் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் பயன்களை விரிவுபடுத்தி வழங்கியுள்ளதால், அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் உயர் கல்வி பயில இயன்றுள்ளது. உயர் கல்விக்கான கல்வி உதவித் திட்டத்தில், மத்திய அரசு உறுதியளித்தவாறு அதன் பங்காகிய *1,592* கோடி ரூபாயை இன்னும் விடுவிக்காவிட்டாலும், *2015-2016* திருத்த மதிப்பீடுகளில் இதற்கான ஒதுக்கீட்டை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உயர்த்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) *2006-2007* முதல் *2010-2011* ஆம் ஆண்டு வரை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு உயர் கல்வி உதவித்தொகையாக *836* கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால் கடந்த ஐந்தாண்டுகளில், இதற்காக *3,607* கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசால் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வி உதவித்தொகைக்காக, இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் *1,430* கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்றே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின்கீழ், *289* கோடி ரூபாய் செலவில், *8,63,159* மிதிவண்டிகள் கடந்த ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) *2016-2017* ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்குவதற்காக *64.86* கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

பிற்பகல் 1-00

93. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பிரிவுகளைச் சார்ந்த இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை அளிப்பதோடு, அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களையும் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனம் (TAHDCO) செயல்படுத்தி வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்காக 436 கோடி ரூபாயும், திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களுக்காக 15 கோடி ரூபாயும் தாட்கோ நிறுவனத்தால் செலவிடப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டில் மத்திய சிறப்பு உதவித் திட்டத்திற்காக (SC-A) 130 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. வரும் 2016-2017 ஆம் ஆண்டிற்கும் இதே அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

94. இன்றைய நிலவரப்படி, 98,039 ஆதி திராவிட மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 1,314 விடுதிகளும், 2,782 பழங்குடியின மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 42 விடுதிகளும், 30,933 மாணவ, மாணவியர்கள் பயிலும் 302 பழங்குடியினருக்கான உண்டி உறைவிடப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் 142 கோடி ரூபாய் செலவில் 198 தங்கும் விடுதிகளும், 55 பள்ளிக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கான தொகை கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த முயற்சிகளைத் தொடர்வதற்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 103.96 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

95. 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து, ஆண்டுதோறும் 50 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், கட்டமைப்பு வசதிகளுக்கும், வருவாய் ஈட்டும் தொழில்களுக்கும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டில், அரசு பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளைப் பழுதுபார்த்து சீரமைப்பதற்காக, சிறப்பு ஒதுக்கீடாக 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. மேலும், 57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் ஐந்து தொழில்நுட்பப் பயிற்சி



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர் நலனுக்காக 2,702.22 கோடி ரூபாயும், பழங்குடியினர் நலனுக்காக 261.66 கோடி ரூபாயும் இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்

96. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவினரின் கல்வி வளர்ச்சிக்காக, பல்வேறு கல்வி உதவித்தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11-வது வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 736.81 கோடி ரூபாய் செலவில் 22.18 இலட்சம் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்திற்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 162.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

97. 2011 ஆம் ஆண்டு, மே மாதத்திலிருந்து இதுவரை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவர்களுக்கு 100 புதிய தங்கும் விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது, 1,338 தங்கும் விடுதிகளில் 84,314 மாணவர்கள் தங்கிப் பயன்பெற்று வருகின்றனர். மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்துவதற்காக, பள்ளி மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கான மாதாந்திர உதவித் தொகையை 755 ரூபாயாகவும், கல்லூரி மாணவர்களுக்கான இத்தொகையை 875 ரூபாயாகவும் மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு உயர்த்தி வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2016-2017 ஆம் ஆண்டிற்கு தங்கும் விடுதி செலவுகளுக்காகவும், உணவு வழங்குவதற்கான மாதாந்திர உதவித் தொகைக்காகவும் 79.23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

98. மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் 30,538 மாணவர்கள் பயன்பெறும் 290 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் 40.08 கோடி ரூபாய் செலவில் இப்பள்ளிகளுக்கான கட்டமைப்பு வசதிகள்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

மேம்படுத்தப்பட்டுள்ளன. இப்பள்ளிகளுக்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 108.76 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**சிறுபான்மையினர் நலன்**

99. கிறிஸ்துவர்கள் ஜெருசலத்திற்கு புனிதப் பயணம் செல்வதற்காக நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கான வருடாந்திர நிருவாக மானியத்தை ஒரு கோடி ரூபாயாக உயர்த்தியும், உலமாக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத்தை 1,000 ரூபாயாக உயர்த்தியும், இஸ்லாமிய மதத்தவரின் நலனுக்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முனைப்போடு எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு ஹஜ் குழுவிற்கு வழங்கப்படும் நிருவாக மானியமும் 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

பிற்பகல் 1-05

**மாற்றுத் திறனாளிகள் நலன்**

100. பல்வேறு நலத் திட்டங்களின் மூலமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உதவிக் கரங்கள் மாற்றுத் திறனாளிகளைச் சென்றடைந்துள்ளன. அவற்றுள் சில:

- மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் வேலைவாய்ப்புப் பெறாதவர்களுக்கான உதவித்தொகை இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளதோடு, மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளவர்கள், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)
- குடும்பத்தில் யாரேனும் ஒரு மாற்றுத் திறனாளி இருந்தால்கூட, வருமான உச்ச வரம்பின்றி, அக்குடும்பத்திற்கு முதலமைச்சரின் விரிவுபடுத்தப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் பலன்கள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

- செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு 27 மாவட்டங்களிலும், கண்பார்வை பாதிக்கப்பட்டோருக்கு 9 மாவட்டங்களிலும், இக்குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சரிசெய்வதற்கான ஆய்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

101. மாற்றுத் திறனாளிகளின் நலனைப் பாதுகாக்க மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் தேசிய அளவில் பாராட்டப்பட்டு, 2013-2014 ஆம் ஆண்டில், (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுத் திறனாளிகள் நலனைப் பாதுகாப்பதில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலத்திற்கான விருதையும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஐந்தாண்டுகளில், மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக 1,490.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டில் 177.69 கோடி ரூபாயாக இருந்த மாற்றுத் திறனாளிகளுக்கான ஆண்டு நிதி ஒதுக்கீடு, 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் 391.93 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்**

102. அரசு அலுவலர்களுக்கு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 649 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் மூலமாக, 113 மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சைகளுக்குப் பணம் செலுத்தாமல் பயன்பெற வழிவகுக்கப்பட்டுள்ளது. இதுவரை, 668.52 கோடி ரூபாய் அளவிலான மருத்துவ உதவியை 1,69,622 பயனாளிகள் பெற்று பயனடைந்துள்ளனர். இதற்கான காப்பீட்டுத் தொகைக்காக இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 260.81 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்றே, ஏழு இலட்சம் ஓய்வூதியர்கள் பயன்பெறும் வகையில் ஒரு காப்பீட்டுத் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை, 215.32 கோடி ரூபாய் அளவிலான மருத்துவ உதவியை 75,389 ஓய்வூதியர்கள் பெற்றுப் பயனடைந்துள்ளனர். 2016-2017 ஆம் ஆண்டிற்கு, இத்திட்டத்திற்கான காப்பீட்டுத் தொகைக்காக 129 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதியம் மற்றும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

ஓய்வுகாலப் பலன்களுக்காக 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 19,841 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**வரவு—செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்**

103. 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் கணிக்கப்பட்டுள்ள செலவினங்களை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பற்றி இனி விளக்க விழைகிறேன்.

104. கடந்த இரண்டாண்டுகளில், வரி வருவாயில் குறிப்பாக, வணிக வரி வருவாயில், காணப்பட்டு வந்த குறைவான வளர்ச்சி 2015-2016 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து வருகிறது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை கணிசமாகக் குறைந்துள்ளதால், பெட்ரோலியப் பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைக்கக்கூடிய விற்பனை வரி வருவாயும் பெருமளவு குறைந்துவிட்டது. இதனால், ஆண்டுதோறும் மாநில அரசிற்கு சுமார் 4,000 கோடி ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. கச்சா எண்ணெயின் விலை குறைந்துள்ளதை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, பெட்ரோல் மற்றும் டீசலின்மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வையை மத்திய அரசு பலமுறை உயர்த்தி, தனது வருவாயைப் பெருக்கி தக்கவைத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். நமது அண்டை மாநிலங்களும் இது போன்றே பெட்ரோல் மற்றும் டீசல்மீதான வரியை உயர்த்தி வருவாய் இழப்பை ஈடுசெய்துள்ளபோதிலும், மாண்புமிகு அம்மா அவர்களது நல்லரசு இத்தகைய நடவடிக்கையை எடுக்கவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

105. தற்போது நிலவிவரும் அனைத்துக் காரணிகளையும் கருத்தில் கொண்டு, 2015-2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 86,537.70 கோடி ரூபாயாக உள்ள மாநில சொந்த வரி வருவாய், 2016-2017 ஆம் நிதியாண்டில் 96,531.41 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் கணக்கிடப்பட்டதைவிட, வணிக வரி வருவாய் 11.69 சதவீதம் வளர்ச்சி பெற்று, 2016-2017 ஆம் நிதியாண்டில் 72,326.45 கோடி ரூபாயை எட்டும் என கணிக்கப்பட்டுள்ளது. மேலும், மாநில ஆயத்தீர்வை மூலம் கிடைக்கும் வருவாய், வரும்



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நிதியாண்டில் 7,101.81 கோடி ரூபாயை எட்டும் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், முத்திரைத் தாள்கள் மற்றும் பதிவுக் கட்டணங்களின்கீழ் கிடைக்கும் வருவாய் 10,548.25 கோடி ரூபாய் எனவும், வாகனங்கள்மீதான வரிகள் 4,925.05 கோடி ரூபாய் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-10

106. இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் 9,288.63 கோடி ரூபாய் எனவும், மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு 23,688.11 கோடி ரூபாய் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. பல மத்திய அரசுத் திட்டங்களின் நிதிப் பங்கீட்டு முறை 2015-2016 ஆம் ஆண்டு முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளதால், 2016-2017 ஆம் ஆண்டில் நமது மாநில அரசிற்கு 1,400 கோடி ரூபாயிலிருந்து 2,000 கோடி ரூபாய் வரை கூடுதல் நிதிச்சுமை ஏற்படும். இந்த மாற்றங்களைக் கணக்கில் கொண்டு, 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் மானிய உதவி 22,496.08 கோடி ரூபாய் அளவில் மட்டுமே இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**நிதிநிலைக் குறியீடுகள்**

107. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்த வருவாய் வரவுகள் 1,52,004.23 கோடி ரூபாய் எனவும், மொத்த வருவாய் செலவினங்கள் 1,61,159.01 கோடி ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக வரும் நிதியாண்டில் 9,154.78 கோடி ரூபாய் அளவிலான வருவாய்ப் பற்றாக்குறை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள குறைவால், குறிப்பாக, பெட்ரோலியப் பொருட்களிலிருந்து கிடைக்கும் வருவாய் குறைந்துள்ளதால், இத்தகைய பெரும் வருவாய்ப் பற்றாக்குறை தவிர்க்க இயலவில்லை என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன். மேலும், பசுமை வீடுகள் திட்டம், விலையில்லா மின் விசிறிகள், மிக்சிகள், கிரைண்டர்கள், மடிக் கணினிகள் வழங்குதல், சிறப்பு பொது விநியோகத் திட்டம், சமூகப்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

பாதுகாப்புத் திட்டங்கள் போன்ற பிற மாநிலங்கள் செயல்படுத்தாத பல முன்னோடித் திட்டங்களை நமது மாநிலம் செயல்படுத்தி வருவதும் இதற்குக் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்தாத பல மாநிலங்களும் பெரும் வருவாய்ப் பற்றாக்குறை நிலையை எதிர்நோக்கியுள்ளன என்பதையும் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனைக் கருத்தில் கொண்டு, 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் இந்தப் பேரவைமுன் வைக்கப்படும்போது, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தில் தேவைப்படும் திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

108. 2015-2016 திருத்த மதிப்பீடுகளில் நிதிப் பற்றாக்குறை 32,359.59 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.94 சதவீதமாகும். 2016-2017 ஆம் ஆண்டில் இப்பற்றாக்குறை 36,740.11 கோடி ரூபாயாக இருக்கும். இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.92 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், பதினான்காவது நிதிக் குழு பரிந்துரைத்துள்ள வரையறைகளுக்குட்பட்டே இருக்கும். வரும் நிதியாண்டில் 37,782 கோடி ரூபாய் வரை கடன் வாங்க மாநிலத்திற்கு தகுதியுள்ள போதிலும், 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கடன் அளவு 35,129 கோடி ரூபாய் அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான இந்த ஆட்சிக் காலம் முழுவதிலும் நிதி ஆதாரங்களைக் கையாள்வதில் மிகப் பொறுப்போடு செயல்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நிதிப் பற்றாக்குறை, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மொத்தக் கடனின் விகிதம் போன்ற பல்வேறு நிதிக் குறியீடுகளை, வரையறைக்குட்பட்டு பின்பற்றி மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்பட்டுள்ளது.

109. இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையின் இணைப்பில் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் @ இணைக்கப்பட்டுள்ளது. இதனை நிதிநிலை அறிக்கையின் ஒரு பகுதியாக எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

---

@ 73 முதல் 82 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

110. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களாட்சியில் உண்மையான அதிகாரம் மக்களிடத்தில் மட்டுமே உள்ளது. மக்களின் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களின் நலனை பாதுகாக்க பாடுபடவும், மாநிலத்தின் மேம்பாட்டிற்கு உழைக்கவும் அவர்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளாக நாம் உள்ளோம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டு, அனைத்துத் தரப்பு மக்களின் ஒட்டுமொத்த ஆதரவைத் தொடர்ந்து பெற்று வரும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அனைவரின் தேவைகளையும் நிறைவு செய்யும் வகையில் அயராது பணியாற்றி, கடந்த ஐந்தாண்டுகளாகத் திறம்படச் செயல்பட்டு, நல்லாட்சியைத் தந்துள்ளார்கள். (மேசையை தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமது மதிநுட்பமிக்க தலைமையின் மூலமாக, தமிழ்நாட்டை வலிமையான, முற்போக்கான, வளமான மாநிலமாக மாற்றியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை முழுமையாக அறிந்துள்ள நமது மக்கள் தவறான பிரச்சாரத்தினால் ஏமாற மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பாலையும், நீரையும் பிரித்துண்ணும் அன்னப் பறவையைப் போல, நமது மக்களால் நல்லதையும், கெட்டதையும் தெளிவாகப் பிரித்துப் பார்க்க இயலும். அவர்கள் தக்க நேரத்தில் சரியான முடிவெடுப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசுக்கு மக்கள் அளித்துள்ள மகத்தான ஆதரவுக்கு, என்றென்றும் நாங்கள் நன்றிக் கடன்பட்டுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆதரவைத் தொடர்ந்து அளித்து, வருகின்ற தேர்தலிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களை மீண்டும் மகத்தான வெற்றி பெறச் செய்வார்கள் எனவும், (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து இட்டுச் செல்லும் நமது பயணம் தொடரும் எனவும் உறுதிபடக் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

111. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் அடிகளின் திருவாக்கிற்கிணங்க, அனுதினமும் மக்களைப் பற்றியே சிந்தித்து, மக்கள் நலனுக்காகவே வாழ்ந்து, எண்ணற்ற பல திட்டங்களைத் தீட்டி, அதன் பயன் முழுமையாக மக்களைச் சென்றடைய அல்லும் பகலும் அயராது உழைத்து வரும்

(மேசையைத் தட்டும் ஒலி) இணையற்ற மக்கள் போற்றும் மாபெரும் தலைவியாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அமைதி, வளம், வளர்ச்சி என்ற குறிக்கோள்களை எட்டிடும் வகையில் தமிழ்நாட்டை வழி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாநிலத்தை வறுமை இல்லாத மாநிலமாக, அனைவருக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கும் மாநிலமாக, எல்லாரும் எல்லாமும் பெற்று இல்லாமை இல்லாத வளம் நிறைந்த மாநிலமாக, (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்கிட கடந்த ஐந்து நிதிநிலை அறிக்கைகளை தன் அறிவுக்கூர்மையாலும், ஆழ்ந்த அனுபவத்தாலும் உருவாக்கி வழிநடத்தியதுபோல், இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையையும் செவ்வனே உருவாக்கி, என்னை வழிநடத்தியது என் வாழ்வில் கிடைத்ததற்கரிய பெரும்பேறாகும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதற்காக மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்றென்றும் நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*112.* இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதில் என்னுடன் அயராது பணியாற்றிய நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலர் திரு க. சண்முகம், இ.ஆ.ப., அவர்களுக்கும், அவருடன் அயராது பணியாற்றிய நிதித் துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*113.* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2016-2017* ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் *1-20*

## 2. முன்பண மானியக் கோரிக்கைகள், 2016-2017, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2016-2017* ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2016-2017* ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்.

### 2016-2017 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநில சட்டமன்றம் | 28,33,79 | – | 1 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 21,47,39 | – | – |
| 3 | நீதி நிருவாகம் | 485,48,02 | – | – |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 1,762,19,72 | 163,39,76 | 1 |
| 5 | வேளாண்மைத் துறை | 4,229,19,75 | 183,04,46 | 97,82,50 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 701,11,15 | 71,66,27 | 1 |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 258,33,34 | 224,60,83 | – |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 32,57,94 | 45,17,60 | – |

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 611,49,17 | 68,73,60 | 1 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 210,92,81 | – | 1 |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 198,69,97 | – | – |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 388,64,66 | 74,42,78 | 8,04,60 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 3,709,31,81 | 330,64,23 | 1 |
| 14 | எரிசக்தித் துறை | 5,314,50,62 | 2,056,75,00 | 1,408,85,05 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 7,61,05 | 9,75,01 | 13,00,01 |
| 16 | நிதித் துறை | 726,22,76 | 1,300,00,00 | 71,15,70 |





| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 705,53,38 | 1 | 24,67,44 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 113,27,39 | – | 1 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 5,819,88,74 | 76,16,67 | 1 |
| 20 | உயர் கல்வித் துறை | 2,363,73,07 | 119,93,73 | 1 |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 891,02,66 | 4,625,04,11 | 1 |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 3,657,34,22 | 293,15,03 | 13,00,02 |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 147,55,22 | 1 | – |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 161,81,55 | 20,99,68 | – |

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 151,04,96 | 3,25 | – |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 777,52,37 | 390,02,61 | 429,00,01 |
| 27 | தொழில் துறை | 1,076,54,03 | 31,99,44 | 259,38,31 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 43,58,58 | 1 | – |
| 29 | சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 64,61,83 | 45,84,29 | 1 |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 62,15,16 | 2 | – |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 87,93,77 | – | 1 |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 626,05,92 | 10,10,33 | 1 |



2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 33 | சட்டத் துறை | 18,42,54 | – | – |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 4,691,24,10 | 3,055,63,42 | 179,35,85 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 59,36,44 | – | 24,38 |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 157,75,99 | 113,51,61 | 1 |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 69,10,22 | – | – |
| 38 | பொதுத் துறை | 510,35,48 | 3 | 38,47,50 |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 164,31,67 | 471,69,42 | 1 |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 1,133,85,08 | 1,253,53,88 | – |
| 41 | வருவாய்த் துறை | 3,774,11,38 | 49,11,65 | 1 |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 11,388,62,30 | 638,84,63 | 1 |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 15,580,62,11 | 552,45,13 | 3,51 |

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 193,50,71 | 32,77,66 | 1 |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 2,924,81,49 | 3 | 1 |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 21,28,02 | – | 1 |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 52,55,74 | 1 | – |
| 48 | போக்குவரத்துத் துறை | 725,02,42 | 227,50,02 | 81,25,01 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 91,48,80 | 1,38,64 | 1 |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 14,194,92,33 | – | – |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 463,92,61 | – | – |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 254,66,73 | 8,94 | 1 |
| 53 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | 1,173,30,51 | – | 1 |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 332,85,67 | 77,43,44 | – |
| | **பெருமொத்தம்** | **93,411,89,14** | **16,615,47,24** | **2,624,30,12** |





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17-2-2016) புதன்கிழமை, காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-20 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

———

# இணைப்பு

*(62 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

*தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டம் 2003-ன் பிரிவு 3(1)-ன்படி, வரவு-செலவுத் திட்ட அறிக்கையுடன் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும் மாநில அரசு சட்டமன்றப் பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின், பிரிவு 3(2)-ன்படி, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை போன்ற நிதிநிலைக் குறியீடுகளுக்கான இலக்குகளை வரும் ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டும், அதற்கான அனுமானங்களைத் தெளிவாக விளக்கியும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி, வரும் ஆண்டு மற்றும் 2017-2018 முதல் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்படுகிறது.*

### நோக்கங்கள்

*அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் சமச்சீரான வளர்ச்சி பெற்று, ஏழைகள், நலிவடைந்த பிரிவினர் ஆகியோரும் மாநில வளர்ச்சியில் பங்கேற்கும் வகையில் உரிய வாய்ப்புகளை ஏற்படுத்தத் தேவையான நிதி ஆதாரத்தை உருவாக்கி, உயர் பொருளாதார வளர்ச்சியை அடையும் வகையில் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.*

*சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், கல்வி உதவித் தொகைகள் போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் சாலைகள், நீர்ப்பாசனம் மற்றும் மின்திட்டங்கள் போன்ற மூலதனச் செலவுகளுக்கு இந்த அரசு அதிக அளவில் செலவிட்டு வருகிறது. இவற்றுடன், தொடர்ந்து உயர்ந்துவரும் அகவிலைப்படி உயர்வு, ஊதிய உயர்வு, புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பு மற்றும் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல் போன்ற நிருவாகச் செலவினங்களுக்கான நிதித் தேவைகளையும் மாநில அரசு நிறைவு செய்ய வேண்டியுள்ளது. அதே வேளையில், பதினான்காவது நிதி ஆணையம் வகுத்துள்ள இலக்குகளுக்குட்பட்டு நிதிநிலை உறுதித்தன்மையை அடையவும் அரசு உறுதியாக உள்ளது.*

[2016 பிப்ரவரி 16

வருவாய்ப் பற்றாக்குறை அளவைக் கட்டுப்படுத்துதல், 2017-2018 ஆம் ஆண்டினைத் தவிர்த்து ஏனைய ஆண்டுகளில் நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் மூன்று சதவீதத்திற்குள் கட்டுப்படுத்துதல் மற்றும் பதினான்காவது நிதி ஆணையம் நிர்ணயித்துள்ள வரம்பிற்குள் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் அளவு சதவீதத்தைப் பராமரித்தல் முதலான நிதிநிலை இலக்குகள் 2016-2019 ஆண்டு காலத்திலும், அதனைத் தொடர்ந்தும் பராமரிக்கப்பட வேண்டும் என்பதை இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டமானது உறுதி செய்கிறது.

**எதிர்காலக் கணிப்புகள்**

2016-2017 ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சி பதினான்காவது நிதி ஆணையம் மதிப்பிட்ட அளவிலேயே கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது. தற்போதைய போக்குகளின் அடிப்படையில், 2016-2017 ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் மேலும் உயரும் எனவும், பண வீக்கம் மிதமான அளவில் இருக்குமெனவும் கணிக்கப்பட்டுள்ளது.

**I. வருவாய்க் கணக்கு வரவுகள்**

மத்திய அரசின் நிதி உதவி உள்ளிட்ட மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.1,52,004.23 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. வருவாய்க் கணக்கு வரவுகளின் முக்கியக் கூறுகள் மற்றும் அவற்றின் வளர்ச்சிப் போக்குகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

**1. மாநில அரசின் சொந்த வரி வருவாய்**

2012-2013 ஆம் ஆண்டில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பு 3.39 சதவீதமாக இருந்தது. இந்த வளர்ச்சி 2014-2015-ல் 7.25 சதவீதமாக உயர்ந்துள்ளது. 2015-2016 ஆம் ஆண்டில் இந்த வளர்ச்சி, 2011-2012 ஆம் ஆண்டின் நிலையான விலையில், 9.13 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மாநில பொருளாதாரம் வளர்ச்சி பெற்று வருகிறது என்பதற்கு இது சான்றாகும். 2016-2017 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு, அடுத்த ஆண்டில் மாநிலம் அதிக வளர்ச்சி அளவை எய்துமென மதிப்பிடப்பட்டுள்ளது.



2016 பிப்ரவரி 16]

2015-2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டின்படி, மாநில அரசின் சொந்த வரி வருவாய் ரூ.86,537.70 கோடியாகும். 2016-2017 ஆம் ஆண்டில் இது ரூ.96,531.41 கோடியாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 11.55 சதவீத வளர்ச்சியாகும். 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் மாநில அரசின் சொந்த வரி வருவாய் விகிதம் 7.66 சதவீதமாக இருக்கும். 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் முறையே 14.65 மற்றும் 14.66 சதவீத வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது. மாநில அரசின் சொந்த வரி வருவாயின் முக்கிய அம்சங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

(அ) 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வணிக வரியின் மூலம் பெறப்படும் வருவாய் வரவுகள், 2015-2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளைவிட 11.69 சதவீதம் உயர்ந்து, ரூ.72,326.45 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) 2016-2017 ஆம் ஆண்டில் மாநில ஆயத்தீர்வைகளின் மூலம் வரவுகள் ரூ.7,101.81 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய போக்குகளின் அடிப்படையில், 2015-2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளை விட 10.47 சதவீதம் அதிகமாக இருக்கும் எனக் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

(இ) 2016-2017 ஆம் ஆண்டில் முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலமாகக் கிடைக்கும் வரவுகள், 11.39 சதவீதம் அளவிற்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, 2015-2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் ரூ.9,469.29 கோடி என மதிப்பிடப்பட்டுள்ள வருவாய், 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.10,548.25 கோடியாக இருக்கும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஈ) மோட்டார் வாகன வரி வருவாய் 2015-2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் ரூ.4,385 கோடி என்று மதிப்பிட்டுள்ளதைவிட உயர்ந்து, 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.4,925.05 கோடியாக இருக்கும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**2. வரி அல்லாத வருவாய்**

இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2016-2017-ல் வரி அல்லாத வருவாய் ரூ.9,288.63 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. சுரங்கத் தொழிலுக்கு நமது மாநிலத்தில் குறைந்த வாய்ப்புகளே உள்ளதாலும், பெரும்பாலான அரசு சேவைகள் கட்டணம் இல்லாமலோ அல்லது குறைந்த கட்டணத்திலோ வழங்கப்படுவதாலும், 2015-2016 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டு அளவிலிருந்து சிறிதளவே உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் 9 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

**3. மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு**

மத்திய வரிகளில் நிகர வரி வருவாயை மாநிலங்களுக்கிடையே பகிர்ந்துகொள்வதற்கு பதின்மூன்றாவது நிதி ஆணைய பரிந்துரைப்படியான தமிழகத்தின் பங்கானது பதினான்காவது நிதி ஆணையத்தின் பரிந்துரையால், சேவை வரியைப் பொறுத்தவரையில் 5.047 சதவீதத்திலிருந்து 4.104 சதவீதமாகவும், ஏனைய வரிகளைப் பொறுத்தவரையில் 4.969 சதவீதத்திலிருந்து 4.023 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, பெட்ரோலியப் பொருட்கள் மீதான ஆயத்தீர்வையை பல முறையும், சேவை வரியை 14.50 சதவீதமாகவும் உயர்த்தியுள்ளதால், மாநிலங்களுக்கு இந்தக் கூடுதல் நிதி ஆதாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் வாய்ப்புள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது. 2016-2017 ஆம் ஆண்டில் மத்திய வரிகளில் நமது மாநிலத்திற்கான பங்கு ரூ.23,688.11 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் 15 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

**4. மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்**

பதினான்காவது நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ள மாநிலப் பேரிடர் பொறுப்பு நிதி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான அடிப்படை மற்றும் செயல்பாடுகளுக்கான மானியங்கள் போன்ற உதவி மானியங்கள் மற்றும் மத்திய அரசின் நிதி உதவியில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான நிதியுதவியையும் கருத்திற்கொண்டு, 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால





வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் ரூ.22,496.08 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டு முதல் மத்திய அரசு பொறுப்பேற்கும் பெரும்பாலான திட்டப் பணிகளுக்கு மத்திய அரசு தனது பங்கினை 60 சதவீதமாகக் குறைத்துள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடானது மத்திய அரசிடமிருந்து வரப்பெறவேண்டிய மத்திய விற்பனை வரிக்கான இழப்பீட்டுத் தொகையையும் உள்ளடக்கியதாகும். இவை அனைத்தையும் கணக்கிற்கொண்டு, 2017-2018, 2018-2019 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் முறையே 12 மற்றும் 10 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

**II. வருவாய்க் கணக்கில் செலவுகள்**

2016-2017 ஆம் ஆண்டிற்கான வருவாய்க் கணக்கு செலவுகள் ரூ.1,61,159.01 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2015-2016 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டை விட 9.05 சதவீதம் கூடுதலாகும். வருவாய்க் கணக்கு செலவுகளின் முக்கிய கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

- 2016-2017 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் சம்பள செலவினத்திற்கான ஒதுக்கீடு ரூ.47,261.92 கோடியாகும். ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வுக்கால பலன்கள் குறித்த செலவினத்திற்கான ஒதுக்கீடு ரூ.19,840.81 கோடியாகும். இவ்வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவுகள் மொத்த வருவாய்ச் செலவுகளில் 41.64 சதவீதமாகும். அகவிலைப்படி உயர்வு, ஊதிய உயர்வு மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புதல் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய செலவுகளின் காரணமாக, 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் முறையே 30 மற்றும் 10.50 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. 2017-2018 ஆம் ஆண்டு முதல் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று கருதப்படுவதன் அடிப்படையில் இவை கணிக்கப்பட்டுள்ளன.

[2016 பிப்ரவரி 16

- 2016-2017 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மானியம் மற்றும் உதவித் தொகைக்கான ஒதுக்கீடு ரூ.62,382.40 கோடியாகும். உணவு மானியம், மின்சார மானியம், நியாய விலைக் கடைகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்தல், கல்வி உதவித் தொகைகள் முதலான பல்வேறு நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளைக் கருத்திற்கொண்டு இவ்வுயர் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் வளர்ச்சிக் கணிப்பிற்கேற்ப, உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு கணிக்கப்பட்டுள்ளது. இதுபோன்றே, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு கூடுதல் மானியம் வழங்குவதும் மானியங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டு அளவை உயர்த்தியுள்ளது. 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் 8 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
- 2016-2017 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஊதியம் அல்லாத செயல்முறை மற்றும் பராமரிப்பு செலவுகள் 10,361.59 கோடியாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பராமரிப்பு, நிருவாகச் செலவுகள், எரிபொருள் செலவுகள் மற்றும் பள்ளி மாணவர்களுக்குச் சீருடை வழங்குதல் ஆகிய திட்டங்களால் இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது. 2017-2018, 2018-2019 ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் 5 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.
- 2016-2017 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் வட்டி செலுத்துதல் ரூ.21,304.48 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது மொத்த வருவாய்ச் செலவுகளில் 13.22 சதவீதமாகும். 2016-2017 ஆம் ஆண்டிற்கான வட்டிச் செலவு மொத்த வருவாய் வரவில் 14.02 சதவீதமாகும். இது, 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளிலும் 14 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## III. மூலதனக் கணக்கில் செலவுகள்

2016-2017 ஆம் ஆண்டில் மூலதனம் குறித்த செலவுகளை பெருமளவு உயர்த்த மாநில அரசு கருதியுள்ளது. அதன் விளைவாக, மூலதனம் குறித்த செலவுகளுக்கு 2015-2016 ஆம் ஆண்டிற்கான



2016 பிப்ரவரி 16]

திருத்த மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடான ரூ.22,878.45 கோடி, 2016-2017 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.27,585.33 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 2017-2018 ஆம் ஆண்டில் 10.88 சதவீதம் மற்றும் 2018-2019 ஆம் ஆண்டில் 10.97 சதவீதமாகவும் மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## IV. வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை

2016-2017 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.9,154.78 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2017-2018 ஆம் ஆண்டிலிருந்து ஏழாவது ஊதியக் குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று கருதுவதன் அடிப்படையில், அவ்வாண்டில் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படும் என கணிக்கப்படுகிறது. 2016-2017 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை ரூ.36,740.11 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.92 சதவீதமாக இருக்கும். மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2017-2018 ஆம் ஆண்டில் 3.30 சதவீதமாகவும், 2018-2019ல் 2.79 சதவீதமாகவும் இருக்கும். 2017-2018 ஆம் ஆண்டில் ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைகளால் ஏற்படும் கூடுதல் செலவினங்களைச் சமாளித்து நிதிப் பற்றாக்குறையை நிர்ணயிக்கப்பட்ட 3 சதவீத அளவிலேயே கட்டுப்படுத்த வேண்டுமெனில், மாநில அரசு கூடுதல் நிதி ஆதாரத்தைத் திரட்டுவது அல்லது செலவுகளைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

## V. கடன்

2016-2017 ஆம் ஆண்டில் ரூ.37,782 கோடி அளவிற்கு கடன் திரட்டுவதற்கு மாநில அரசிற்கு அனுமதியுள்ளபோதிலும், கடன் வாங்குவதை கடந்த காலங்களைப்போல் கட்டுப்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. 2016-2017 ஆம் ஆண்டில் நிகர கடன் வாங்குதல் ரூ.35,129 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. வருங்கால வைப்பு நிதி உள்ளிட்ட நிலுவையிலுள்ள கடன் 31-3-2017 அன்று, ரூ.2,47,031 கோடியாக இருக்கும். இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 19.62 சதவீதம் மட்டுமே ஆகும்.

[2016 பிப்ரவரி 16

## VI. கடன் உத்தரவாதங்கள்

ஒவ்வோர் ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவு அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவு, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 31-3-2015 அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 49.70 சதவீதமாகவும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 5.70 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வோர் ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதம் அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.50 சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 31-3-2015 அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 9.28 சதவீதமாகவும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 1.06 சதவீதமாகவும் உள்ளது.

### முடிவுரை

உலக பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மந்த நிலை, மாநில பொருளாதாரத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சியானது, இத்தாக்கத்தின் அளவினை மேலும் அதிகரித்துள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் 3.39 சதவீதம் வளர்ச்சி பெற்ற மாநில மொத்த உற்பத்தி மதிப்பானது, 2014-2015 ஆம் ஆண்டில் (2004-2005 ஆம் ஆண்டின் நிலையான விலையில்) 7.25 சதவீதமாக வளர்ச்சி பெற்றுள்ளது. நடப்பாண்டில், மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சி, 2011-2012 ஆம் ஆண்டின் நிலையான விலையில், 9.13 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விற்பனை வரி, குறிப்பாக, பெட்ரோலியப் பொருட்களின் விற்பனை மூலம் பெறப்படும் வரி குறைந்துள்ளதே, மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் குறிப்பிடத்தக்க அளவிற்கு ஏற்பட்டுள்ள



2016 பிப்ரவரி 16]

வீழ்ச்சிக்குக் காரணமாகும். மேலும், மத்திய அரசு மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய நிகர வரி வருவாயில் தமிழகத்தின் பங்கு குறைந்ததும், மத்திய அரசால் காலம் தாழ்த்தி உதவி மானியங்கள் விடுவிக்கப்படுவதும், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப் பணிகளுக்கு மத்திய அரசு தனது பங்கினை குறைத்துள்ளதும் மாநிலத்தின் நிதி நிலையைப் பாதித்துள்ளது. எனினும், செலவுகள் கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளன. செலவுகளின் பாங்கும் நிலையாக உள்ளது. 2017-2018 ஆம் ஆண்டு முதல் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று கருதப்படுவதன் அடிப்படையில், அந்த ஆண்டைத் தவிர்த்து, ஏனைய ஆண்டுகளில், ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறை, நிகர கடன், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் ஆகியவை வருவாய் வரவுகளில் சுணக்கம் உள்ள நிலையிலும், அனுமதிக்கப்பட்ட அளவிற்கு கட்டுப்படுத்தப்படும். மாநில பொருளாதாரத்தை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல அரசு அனைத்து வகையான நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறது.

****

# இணைப்பு

## அட்டவணை–இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

(ரூபாய் கோடியில்)

| பிப்ரவரி | 2014–2015 கணிப்புகள் | 2014–2015 கணக்குகள் | 2015–2016 கணிப்புகள் | 2015–2016 திருத்த மதிப்பீடு | 2016–2017 கணிப்புகள் | 2016–2017 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2017–2018 கணிப்புகள் | 2016–2019 கணிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருவாய் | **137,733.82** | **122,420.44** | **143,603.43** | **138,306.209** | **162,480.38** | **152,004.23** | **173,234.81** | **196,976.48** |
| மாநிலத்தின் சொந்த வருவாய் | 108,545.23 | 87,007.14 | 112,159.32 | 5,468.95 | 119,108.84 | 105,820.04 | 120,797.87 | 137,933.79 |
| வரி | 101,557.18 | 78,656.54 | 103,892.52 | 86,537.70 | 109,815.20 | 96,531.41 | 110,673.26 | 126,897.96 |
| வரி அல்லாதவை | 6,988.05 | 8,350.60 | 8,266.80 | 8,931.25 | 9,293.64 | 9,288.63 | 10,124.6 | 11,035.82 |
| மத்திய அரசிடமிருந்து பெறப்படுபவை | **29,188.59** | **35,413.30** | **31,444.11** | **42,837.25** | **43,371.54** | **46,184.19** | **152,436.93** | **59,042.69** |
| பங்கிடப்பட்ட வரிகள் | 19,878.51 | 16,824.03 | 22,114.89 | 21,149.89 | 24,583.87 | 23,688.11 | 27,241.33 | 31,327.53 |
| உதவி மானியம் | 9,310.08 | 18,589.27 | | 21,687.36 | 18,787.67 | 22,496.08 | 25,195.61 | 27,715.17 |
| மூலதன வரவுகள் | | 16.29 | 9,329.22 | | | | | |
| வட்டியல்லாத செலவு | **147,583.32** | **133,920.47** | **154,553.74** | **152,315.68** | **172,740.18** | **167,439.86** | **196,081.94** | **2,14,532.03** |
| சம்பளங்கள் (கல்விக்கான மானியங்கள் உட்பட | 40,100.38 | 37,070.31 | 40,721.78 | 41,445.35 | 45,749.28 | 47,261.92 | 61,440.50 | 67,891.75 |
| ஓய்வூதியங்களும் ஓய்வுகாலப் பலன்களும் | 17,785.50 | 15,823.56 | 18,583.93 | 17,543.96 | 20,721.32 | 19,840.81 | 25,793.05 | 28,501.32 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும் | 10,366.76 | 9,498.47 | 11,875.90 | 10,694.00 | 10,882.22 | 10,361.59 | 10,879.67 | 11,423.65 |
| உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும் | 52,404.23 | 50,713.33 | 53,974.83 | 59,741.47 | 64,808.09 | 62,382.40 | 67,372.99 | 72,762.83 |
| ஏனைய வருவாய்ச் செலவினங்கள் | 45.54 | 43.63 | 35.10 | 12.45 | 8.57 | 7.81 | 7.81 | 7.81 |
| மூலதன ஒதுக்கீடு | 25,880.91 | 17,802.98 | 26,852.95 | 20,765.06 | 28,202.80 | 24,508.86 | 27,449.92 | 30,743.91 |
| நிகரக் கடன் வழங்கல் | 1,000.00 | 2,968.19 | 2,509.25 | 2,113.39 | 2,367.89 | 3,076.47 | 3,138.00 | 3,300.76 |
| நிதிக் குறியீடுகள் | | | | | | | | |
| முதன்மை உபரி (+) / பற்றாக்குறை(–) | **–9,849.50** | **–11,500.03** | **–10,950.31** | **–14,009.49** | **–10,259.79** | **–15,435.63** | **–22,847.14** | **–17,555.55** |
| வட்டி செலுத்துதல் | 13,584.93 | 15,678.71 | 17,628.46 | 18,350.10 | 19,999.45 | 21,304.48 | 24,287.11 | 27,687.30 |
| மொத்த வருவாய் வரவுகளில் செலுத்தப்பட்ட வட்டித் தொகை | 9.86% | 12.81% | 12.28% | 13.27% | 12.31% | 14.02% | 14.02% | 14.02% |
| வருவாய் உபரி (+) / பற்றாக்குறை(–) | **664.06** | **–6,407.56** | **783.43** | **–9,481.14** | **311.45** | **–9,154.78** | **–16,546.32** | **–11,298.19** |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+)/பற்றாக்குறை(–)% | 0.56% | –5.23% | 0.55% | –6.86% | 0.19% | –6.02% | –9.55 | –5.74% |
| நிதி உபரி (+)/பற்றாக்குறை(–)யில் வருவாய் உபரி (+)/பற்றாக்குறை(–)% | –2.89% | 23.59% | –2.74% | 29.30% | –1.03% | 24.92% | 535.10% | 24.97% |
| நிதி உபரி (+) / பற்றாக்குறை (–) (சரிக்கட்டப்பட்டவை) | –22,938.57 | –27,162.45 | –28,578.77 | –32,359.59 | –30,259.24 | –36,740.11 | –47,134.25 | –45,242.85 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதி உபரி (+) / பற்றாக்குறை (–) (சரிக்கட்டப்பட்டவை) % | –2.52% | –2.88% | 2.70% | –2.94% | –2.43% | –2.92% | –3.30% | –2.79% |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பு(GSDP) | **9,09,861.75** | **9,42,225.00** | **10,60,003.13** | **10,99,675.00** | **12,47,691.00** | **12,59,397.00** | **14,30,087.00** | **16,23,911.00** |